
1498

M. 2026. குரோதன௵ ஆடி௴ August 1925.

ஓம்

# சன்மார்க்க பாநு

தொகுதி 1 பகுதி 7



VOL I.] SANMARGA BHANU [No. 7.

பொருளடக்கம். பக்கம்.


1. கடவுள் வணக்கம் ... ... 193
2. ஞானிகளின் நிலை ... ... 194
3. தியானம் ... ... 198
4. தொற்றுவியாதிகள் ... ... 199
5. உயர்ந்த செல்வம் ... ... 202
6. வேமனயோகிகள் ஜீவிய சரித்திரம் ... 206
7. பள்ளிக்கூட ஆசிரியன் ... ... 209
8. ஜெ. வி. போஸின் ஆராய்ச்சிகள் ... 211
9. நாகரீகம் ... ... ... 213
10. மானிடப்பிறவியின் அருமையும்பயனும் 215
11. வேதாந்த சாஸ்திரார்த்த சங்கிரக வினாவிடை ... ... 219
12. செல்வம் ... ... ... 220


OFFICE OF THE ... BOOKS 22 SEP

**Editor: Pandit P. Srinivasalu Naidu.**

Printed by M. Ramanujachariar, at the Victoria Jubilee Press, Chittoor, and published at Ranipet by Pandit P. Srinivasulu Naidu.

# "சன்மார்க்க பானு"

## சந்தா விவரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருஷம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | 1—0—0 |
| | பினாங்கு, சிங்கபூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை ... ... | 0—2—0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அந்த வருஷ பிப்ரவரிமாத முதல்கொண்டு கணக்கு வைக்கப்பட்டு தைமாத சஞ்சிகை முதல் சேர்த்தனுப்பப் படும்.

| | | |
|---|---|---|
| ஜீவியசந்தா | இந்தியா, பர்மா, சிலோன் ரூபா. | 15-0—0 |
| | வெளி நாடுகளுக்கு ... ... | 20-0—0 |

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூபா. | 10-0—0 |
| அரைப் பக்கத்திற்கு | " " | " | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | " " | " | 3—0—0 |

நீண்டகால விளம்பரத்திற்கு விகிதம் சிறிது குறைக்கப்படும். விகிதத்தொகை முழுதும் முன்பணமாய் அனுப்பப்படவேண்டும்.

பத்திராதிபர்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

உ

ஓம்.

பரப்ரஹ்மமணே நமஃ

# சன்மார்க்க பானு

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு''—(குறள்)

*All Rights Reserved.*

கற்றை 1 } க்ரோதன ஞூ ஆடி மீ. { கதிர் 7

## கடவுள் வணக்கம்

---

ஔவிய மிருக்கநா னென்கின் றவாணவ
மடைந்திட் டிருக்க லோப
மருளின்மை கூடக் கலந்துள் ளிருக்கமே
லாசா பிசாச முதலாம்
வெவ்விய குணம்பல விருக்குமென் னறிவூடு
மெய்யனீ வீற் றிருக்க
விதியில்லை யென்னிலோ பூரண னெனும் பெயர்
விரிக்கிலுரை வேறு முளதோ
கௌவுமல மாகின்ற நாகபா சத்தினற்
கட்டுண்ட வுயிர்கண் மூர்ச்சை
கடிதகல வலியவரு ஞானசஞ் சீவியே
கதியான பூமி நடுவுட்
செவ்விதின் வளர்ந்தோங்கு திவ்ய குணமேருவே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே. (1)

மனத்தாலும் வாக்காலும் மன்ன வொண்ணு மோன
இனத்தாரே நல்ல இனத்தார்—கனத்த புகழ்
கொண்டவரு மன்னவரே கூறரிய முத்திநெறி
கண்டவரு மன்னவரோ காண். (2)

# சன்மார்க்கபானு.

குரோதன ௵ ஆடி ௴.


## ஞானிகளின் நிலை.

---

சில நாட்களுக்கு முன்பு இரண்டு நண்பர்கள் ஓரிடத்தில் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் அவர்களில் ஒருவர் 'அன்னியரிடமிருந்து எப்பொருளையேனும் வாங்குவோர் உண்மையான ஞானிகளாகார்' என்று கூறிக் கொண்டிருந்ததைக் கேட்டோம். அவ்வாறு கூறியவர் தெய்வபக்தி அடியார் பக்திகளிற் சிறந்தவரென்பதும் நமக்குத் தெரியும். அவ்வாறிருந்தும் அவர் ஞானிகள் விஷயத்தில் இவ்வாறு சொன்னமையால் அவர் ஞானிகளின் தன்மை இன்னதென்றுணராமல் பேசி யிருக்கலாமென்றூகித்து அவ்வித வெண்ணமுடையோர் வேறு பலரு மிருக்கலாமாகலின் (அன்னாருக்காக) ஞானிகளின் நிலையைச் சுருக்கமாக எழுதலானோம்.

பிறவித் துன்பத்தையும் முத்தி யின்பத்தையும் செவ்வையாக ஆராய்ந்துணர்ந்து, துன்பவடிவப் பிறப்பை யொழித்து இன்பவடிவ முத்தியைப் பெறவிரும்பி, அதற்குரிய நெறியைச் சற்குரு சற்சாத்திர வாயிலாக அறிந்து, அதன் பயனாக பிறவிக்கு மூல காரணமாகிய அவிச்சை யென்னும் அஞ்ஞானத்தை கடவுளின் தன்மையையும் தனதுண்மை வடிவினையும் அவரை யடையும் வழியையும் ஐயமற வுணர்தலாகிய ஞானத்தால் நசியச் செய்தவர்களே மெய்ஞ்ஞானிக ளென்னப் படுவர்.

அவர்கள் தங்கள் தங்கள் நிலைமைக்குத் தக்கவாறு பலவிதமாக விருப்பர். 'மாதவம் செயினும் செப்பர் வாணிபம் செயினுஞ் செய்வர், பூதலம் புரப்பர் ஐயம் புகுந்துண்பர் ஜீவன் முக்தர்' என்றபடி, இல்லற நெறியிலிருந்துகொண்டே பயிர் வியாபாரம் ராஜாங்க காரியம் முதலிய தொழில்களைச் செய்யினும் செய்வார்கள். பிச்சை யெடுத்தாலும் எடுப்பார்கள். பிறரால் புகழப்பட்டு மதிப்படைந்து மிருப்பர்; இகழப்பட்டு அவமதிக்கப்படினும் படுவர். இவையெல்லாம் அவரவர்களுடைய பிராரப்த வினைக்கு ஏற்றவாறு நேரிடும். இவ்வாறு பல்வேறு விதங்களாகக் காணப்படினும் அவர்களடைந்துள்ள ஞானமும் முத்தியும் ஒன்றே. இவற்றில் யாதொரு பேதமுமில்லை. சாணை பிடிக்கப்பட்டு பொன்னோடு சேர்ந்து அரசர்களது முடியில் விளங்கும் இரத்தினமும் அழுக்குப்படிந்து ஒளி மழுங்கிக் குப்பையில் கிடக்கும் இரத்தினமும் யோக்கியதாம்சத்தில் ஒன்றே யல்லவா?

இல்லறத்திலிருக்கும் ஞானிகள் வெளித்தோற்றத்தில் மற்றைய சாமானியமானவர்களைப் போலவே காணப்படுவார்கள். எனினும் தங்கள் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருப்பார்கள். நாடகமேடையில் இராமனாகவும் திருடனாகவும் கோமாளியாகவும் நடித்துக்கொண் டிருந்தாலும் தான் இன்னானென்பதை மறவாத வேஷதாரியைப் போன்று தமது உண்மை நிலையினையும் தமக்கும் உலகத்திற்கும் என்ன சம்பந்த மிருக்கின்ற தென்பதையும் மறவாமலே உலக விவகாரங்களைச் செய்துகொண்டிருப்பார்கள்.

துறவற நெறியில் நிற்கும் ஞானிகளில் சிலர் 'நல்லவனே கேள் உலகுபகாரம் ஞானிகள் விவகாரம்' என்கிறபடி லோகோபகாரமான காரியங்களைச் செய்வதிலேயே ஈடுபட்டிருப்பர். சிலர் பித்தம் பிடித்தவர்போலவும் பேய்க்கோட்பட்டாரைப் போலவும் திரிவர். இவர்களின் நிலை இத்தன்மைத் தென்பதைக் கண்டறிவது சுலப சாத்தியமல்ல. பாம்பறியும் பாம்பின் கால்.

இவர்கள் தமக்கு வேண்டிய உணவையும் உடையையும் இல்லறத்தாரிட மிருந்தே பெறவேண்டியவர்கள். ஆகையால்

மனங்கோணுமல் மகிழ்ச்சியுட னளிக்கும் அன்பர்களிடத்தில் தமக்குத் தேவையானதைப் பெறுவர். இது நியாயமே. எவ்வாறெனில் ஏற்பதற் குரியார் துறவிகளும் ஈதலுக்குரியார் இல்லறத்தாரும் என்பது விதி.

இல்லறத்தாருக்குரிய ஒழுக்கத்தைக் கூறுமிடத்து பொய்யாமொழியார்,

'இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை' என்றார்.

அதாவது பிரமசாரி வானப்பிரஸ்தன் சன்னியாசி என்னும் மூவர்க்கும் பசி நோய் குளிர் முதலியவற்ருல் இடையூறு வராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய உதவிகளைச் செய்யக் கடமைப்பட்டுள்ளவன் கிருகஸ்தனே யாவான் என்று கூறி யிருக்கிறார். ஔவையும்

'ஏற்பதிகழ்ச்சி.
ஐயமிட்டுண்' என்று இல்வாழ்வாரின் கடமையைக் கூறிப்போந்தார்.

'யாதானுந் தான் யாவரையு மிரத்தலாலே யாசகராம்.' என்று ஞானியின் லக்ஷணம் கூறப்பட்டிருத்தலால் ஞானிகள் யாசகராயு மிருக்கற்குரியர் என்பது விளங்குகின்றது காண்க. இக்காரணத்தாலேயே அவர்கள் 'பிக்ஷு' க்க ளென்னவும் படுவர்.

ஆகையால் மெய்ஞ்ஞானிகளுக்குத் தேவையானவற்றைக் கொடுப்பது இல்லறத்தார்களின் கடமையும் எல்லாத் தருமங்களினும் தலை சிறந்த தருமமுமாகும். 'இதுதான் பாத்திர மறிந்திடும் பிச்சை.' இல்லறத்தார் இத்தகைய உத்தம தானத்தை கஷ்டப்பட்டுத் தேடிச்சென்று மெய்ஞ்ஞானிகளைக் கண்டு பயபக்தி விசுவாசத்துடன் 'சுவாமி அடியேனுடைய பிக்ஷையை ஏற்றருளல் வேண்டும்' என்று வினயமாக வேண்டிச்செய்தல் அவசியமாகும். மிகுந்த புண்ணிய முடையவர்களுக்கே இப்பாக்கியம் கிடைப்பதாம்.

இஃது இங்ஙனமாகச் சிலர் இந்த உண்மையை யுணராமல் 'ஞானியா? என்ன ஞானி! ஞானிக்குச் சாப்பாடு என்னத்திற்கு? இவரென்ன நம்மைப்போலத்தானே பெண்டாட்டி பிள்ளைகளோ டிருக்கிறார்! இவர் என்ன ஞானி' என்னு மிதுபோன்ற வார்த்தை களைப் பொறாமைக் காரணத்தாலும் அறியாமையின் காரணத் தாலும் உதாசீனமாகக் கருதிப்பேசி அபசாரப் படுகின்றனர். இது மிகவும் தவறும் பாவ ஏதுவுமாகும். ஆதலால் இவ்வித தப்பெண் ணங்களை யகற்றி

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று.' என்னும்

ஔவையின் அமுத மொழியைக் கடைப்பிடித்துத் தம்மாலியன்ற வளவு மனம் வாக்கு காயம் என்னும் திரிகரணங்களாலும் மெய்ஞ் ஞானிகளை வழிபடுவோர் இன்ப நிலையைத் தவறாமல் எய்துவர். இத்தன்மையான பெறலரும் பேற்றை அளித்தருளுமாறு எங்கும் நிறைந்த ஏக சொரூபனை இறைஞ்சி வாழ்த்துவோமாக.

அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே. (தாயுமான
சுவாமிகள்.)

ஓம் தத் ஸத்.

---

# தியானம்.

(167-ம் பக்கத் தொடர்ச்சி).

பிறத்தல் இருத்தல் வளர்தல் மாறுதல் தேய்தல் அழிதல் என்னும் ஆறு விகாரங்களு மற்ற அவிநாசியாம். சரீரம் வதைக்கப் பட்டாலும் தான் வதையாதிருப்பது. பருமை சிறுமை கருமை செம்மை பிராம்மணன் க்ஷத்திரியனுதியவைகளான வர்ணுச்சிரம மாதிய பத்ததிகளும் சரீரத்தில் காணப்படுகின்றனவே யன்றி அவ்விகாரங்களுக்குச் சாக்ஷியான ஆத்மா வின் தர்மமாக அவைகள் காணப்படவில்லை. மதியிலிகள் பிராந்தியால் 'நான் மனிதன், நான் மறையோன், நான் ஞானி, நான் அஞ்ஞானி, நான் மிகப்பாவி, நான் இழிகுலத்தன், நான் சுகி, நான் துக்கி,' என்றிவ்வித மாக மோகித்து அவைகளை ஆத்மாவில் கற்பிக்கின்றூர்கள். ஜனங்கள் புத்தி தோஷத்தால் ஆத்மாவில் ஜன்ம ஜரா மரணங்கள் சோக மோகம் பசி தாகம் சுகதுக்க பயம் ஆகிய இவைகளை விபரீதமாக ஏற்றுகின்றூர்கள். அஞ்ஞர்கள் கல்பித்த நீலத்தால் ஆகாயம் மலினமாமோ? ஆத்மா அவயவமற்ற அத்விதீயமாம். 'ஆத்மா இருக்கின்றது' 'நான் இருக்கின் றேன்' என்று எல்லோருக்கும் அனுபவமாகின்றது. ஒருவரும் 'நான் இல்லை' என்று சொல்லுவதில்லை. தன் இருப்பிற்கு ஓர் பிரமாணமும் வேண்டுவதில்லை. பிரமாணம் வஸ்துவை மாத்திரம் உணர்த்தும். மேக சமூகங்களால் சூரியன் மறைக்கப்படுவதுபோல் அவித்யாகாரியமான அகங்காராதிகளால் மறைக்கப்படுவதால ஆத்மா தன் சொரூபத்தை அறிவ தில்லை. ஆனுல் ஆத்மா அறிவு ரூபம். எப்படி ஒரே அக்கினியும் வாயுவும் புவனத்திற் பிரவேசித்து அந்தந்த வஸ்துவின் ரூபத்திற்குத் தக்கவாறு பிரதி ரூபப்படுகின்றதோ அப்படி ஒன்ருகிய ஆத்மா சர்வபூதங்களினூடே யிருந்து அதன் உருவத்திற் கேற்றவாறு பிரதி ரூபமா யிருக்கின்றது.

ஆத்மா சுவச்சமானது சூட்சுமமானது மிகப் பிரகாசமுள்ளது. புத்தி சத்வ சுவபாவமாயும் சைதன்யாம்சத்துடன் கூடியதாயு மிருக் கின்றது. ஸ்படிகம் சூரியனை யொத்துப் பிரகாசிப்பதுபோல சந்நிதி வசத்தால் அப்புத்தியும் ஆத்மாவைப்போல பிரகாசிக்கின்றது. புத்தி யானது ஆத்மாவைப்போல் பிரகாசித்தும் நயனுதி இந்திரியங்கள் புத்தி யைப்போல் பிரகாசித்தும் சரீரம் நேத்திராதி இந்திரியங்களைப்போல் பிரகாசித்து மிருக்கின்றன. சரவசரப் பகுப்பாகக் காணப்படும் சர்வ ஜகத்தும் நிர்க்குணமும் நிர்மலமும் உபாதி தர்ம மொழிந்ததுமான பிரத் தியகபின்ன பிரம்மமே. அச் சித்கனுனந்தமே இத்தேக சங்காதத்தே ரச சொரூபமாகப் பிராணதாரணம் பண்ணி விஷய சுக ரூபமாய் சித்த

விருத்திபேத சொரூபமாய்ப் போக்ய போகாகார முதலிய நாநாரூபமாய்ப் படிகத்திலும் ஆடி (கண்ணுடி) யிலும் காணப்படும் சந்திர பிம்பம்போல் பிரதி பிம்பிதமா யிருக்கின்றது. நிரதிசயானந்தமே அச் சிதான்மாவின் மூலமாம். அதன் பிரதி பிம்பம் விஷயானந்த அநுபவத்தால் அநுமேயமாம். சுவாத்ம சொரூப நிரதிசய சுகத்தைத் தியான புத்தியிலிருந்து யோகிகள் அனுபவிக்கின்றூர்கள். விவித திருசிய தர்சனத்தாலும் பிராண வசைவாலும் சித்தக்கலக்கம் சேரும்போது அது அநுபவ மாவதில்லை.

இவ்வாறு அச் சச்சிதானந்த பிரத்யகபின்ன பிரம்மத்தைச் சர்வ சாஸ்திரங்களும் விதிமுகமாயும் விலக்கு முகமாயும் போதிக்கின்றன. ஆகவே அகம்புற மெங்கணும் பரிபூரணமும் சொப்பிரகாசமும் சர்வத்தையும் பிரகாசிப்பிப்பதும் அசாதாரமும் அநாதேயமும் அகண்டிதமும் அவாங்மானச கோசரமும் அநாதி அனந்த நிர்விசேஷ நித்ய புத்த முக்த சுவபாவமுமானதுவே பிரம்மமாம். அதுவே தியானிப்பவனது ஆத்ம வடிவாயிருந்து அவனுடைய இருதயத்தே இலகுவதன்றி எல்லாப் பிராணிகளின் இருதயத்தும் இலகுவதாம். அது பரிபூரணமா யிருந்தும் நிர்மல இருதயத்தில் (அந்தக்கரணத்தில்) அதன் விளக்கமாம்; மற்றவிடத்து விளங்குவதில்லை. அக்கினி எங்குமிருந்தாலும் சூரிய காந்தத்தினிடத்தே விளங்கும். உருவ மெங்குமிருந்தும் கண்ணென்றிற்கே புலப்படும்.

(தொடரும்.)

க. அரங்கநாதப் பிள்ளை,
வேதாந்த தர்க்க போதகாசிரியர், சென்னை.

---

## தோற்று வியாதிகள்.

(96-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகவே, நாம் உண்ணும் உணவுகளின் மூலமாகவும், நாம் சுவாசிக்கும் சுவாசத்தின் மூலமாகவும், ஒருவரோடொருவர் சேர்க்கையாலும் வியாதிகள் நம்மைத் தொடர்கின்றன என்பதை நாம் ஒருவாறுக அறிந்துகொண்டோம். நாம் முக்கியமாக கீழ்கண்ட விதிகளை அசட்டை செய்யாமல் கவனித்தால் அநேகமாக இவ்வபாயகரமான வியாதிகளினின்றும்

தப்பித்துக்கொண்டு அகாலமரணத்தி னின்றும் மீட்சிபெற்று சுகமாக வாழ்ந்து மானிடஜன்ம மெடுத்ததனுலாய பயனை யடையலாம்.

## நாம் வசிக்கும் வீட்டையும் வீட்டைச் சுற்றிலும் கவனிக்கவேண்டியவைகள்.

1. ஒவ்வொரு வீடும் சுத்தமாக்கப்படவேண்டும். அதாவது, எல்லாவித எருக்களையும் வெளிப்படுத்தவேண்டும். அசுத்த ஜலத்தை தரையில் தேங்கவிடாமற்படி சரியான ஜலதாரையில் கொண்டுபோய் விடவேண்டும். மாட்டுத்தொழுவம் அப்போதைக்கப்போது சுத்தஞ் செய்யப்படவேண்டும்.

2. அப்படி சுத்தஞ் செய்யப்பட்ட இடம் எங்கெங்கே தரை சதுப்பாக இருக்கிறதோ அவ்விடத்தே சுத்தமான மண் புலப்படும் வரை தோண்டி அசுத்தமாக்கப்பட்ட மண்ணை அப்புறப் படுத்தவேண்டும்.

3. அந்த அசுத்தமண்ணை கிராமத்திற்கு வெளியிலேயோ அல்லது நிலங்களுக்கு எருவாகவோ வுபயோகப் படுத்திக்கொண்டு எடுக்கப்பட்ட மண்ணுக்குப்பதில் சுத்தமான மண்ணை நிரப்பவேண்டும்.

4. வீட்டின் உட்புறமும் வெளிப்புறமும் குறைந்தது மூன்று மாதத்திற் கொருவிசையாவதும் சுண்ணும்பு அடிக்கப்படவேண்டும். வெளிப்புறம் அடிக்கச் சக்தியில்லையாயின் உட்புறமாவது கட்டாயம் சுண்ணந் தீட்டியே ஆகவேண்டும்.

5. படுக்கை யறையில் அதிகமான பெட்டிகளையும் சாமான்களையும் நிரப்பிவைக்கும் வழக்கத்தை ஒழித்துவிட வேண்டும்.

6. வீட்டின் கதவுகளும், ஜன்னல்களும் சுத்தமான காற்றும், சூரிய வெளிச்சமும், பிரவேசிக்கும்படி தாராளமாக திறந்து வைக்கவேண்டும். வீட்டின் ஜலதாரைகளை அடிக்கடி சுத்தம் செய்யவேண்டும்.

உடை உணவுகளைப்பற்றி முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயங்கள்:—

1. "கூழ் ஆனுலும் குளித்துக்குடி"; "கந்தைஆனுலும் கசக்கிக் கட்டு" என்னும் வாக்கியங்களை ஒவ்வொருவரும் அறிந்தவைகளே. ஆனல் "கற்க கசடற-கற் பவை-கற்ற பின் நிற்க அதற்குத்தக" என்பதை மட்டும் கவனிப்பவர் அதிகமாக இல்லை. நாம் பிரதிதினமும் ஸ்நானம்

செய்யவேண்டும். பலவீனர் வெந்நீரிலும், மற்றவர்கள் நீர் பாய்ச்சலுள்ள சுத்தமான நதிகளிலும் காலக்கிரமப்படி ஸ்நானம்செய்து வருதல் அவசியம். குளிப்பது என்பதற்கு மட்டும் தேகத்தை நனைத்துக்கொள்வது கூடாது. சர்மத்தின்மேல் உள்ள அழுக்குப்போக நன்றாய் தேய்த்து குளிக்கவேண்டும், குளிர்ந்த ஜலத்தில் 15 நிமிஷங்களுக்கு மேல் இருத்தல் தகாது. தேகத்தின் உஷ்ணம் குறைந்து நளிர் ஏற்படும்வரை ஸ்நானம் செய்வதும் தகாது. "குளிப்பின் சுகம் துடைப்பில்" என்று இருப்பதால் உலர்ந்த வஸ்திரத்தைக்கொண்டு தேக முழுமையும் சூடு உண்டாக தேய்த்து துடைத்துக்கொள்ள வேண்டும். பிரதிதினமும் சுத்தமான வஸ்திரங்களையே அணியவேண்டும். அழுக்கு வஸ்திரத்தில் அத்தரிட்டது போல குளித்தபிறகு பழைய அழுக்கு வஸ்திரங்களை தரிக்கக்கூடாது.

மூக்குத்தூள் உபயோகிப்பவர்களில் பலரும் ஜலதோஷம் பிடித்தவர்களும் தமது கைகுட்டைகளில் மூக்கைச் சிந்தி சாரத்தை அதில் ஏற்றி கைகுட்டைகளை நசுக்கி மறுபடியும் ஜேபியிலாவது அல்லது கையில் அல்லது மடியில் வைத்திருக்கும் பழக்கம் தற்கால நாகரீகத்தில் ஒன்றாய்விட்டது. இதை அறவே ஒழிக்கவேண்டும்.

உண்ணும் உணவு சுத்தமாகவும், நன்றாக வெந்து பதத்திற்கு வந்ததாகவும் இருக்கவேண்டும். கூடியவரையில் மிதமான போஜனமே தேக ஆரோக்கியத்திற்கு ஏற்றது. அகால போஜனம் எப்பொழுதும் கெடுதியை விளைவிக்கும். போஜனம் முடியுமட்டும் ஒரு விசிறியால் ஈக்களணுகாவண்ணம் பாதுகாத்து சாப்பிடவேண்டும். கொசுக்களும், ஈக்களும் அநேக வியாதிகள் பரவுதற்கு துணைக்கருவிகளாகும். உண்டபின் சிறிது உட்கார்ந்து குறுநடை கொள்ளவேண்டும். அப்படி நடப்பதால் மூத்தோஷம் போவதுடன் புசித்த அன்னமும் சீரணமாகும். உண்டது சீரணமாகுங் காலத்தில் புணர்ச்சி விரும்புதலாகாது. ஆகவே, சிந்தாமணியாரும்,

"பகத்தொழுக்கு மாதரசங் கரந்துடைப்ப மிவைத்தூட்
 படநெருங்கோந் தீபமைந்தர் மரநிழலில் வசியோஞ்
சுகப்புணர்ச்சி யசனபச னத்தருணஞ் செய்யோந்
 துஞ்சலுண விருமலஞ்சை யோகமழுக் காடை
வகுப்பெடுக்கிற் சிந்தகச மிவைமாலை விடுப்போம்
 வற்சலந்தெய் வம்பிதுர்சற் குருவைவிட மாட்டோம்
நகச்சலமு முளைச்சலமுந் தெறிக்குமிட மணுகோம்
 நமனூர்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே."

என்று வெகு அழகாகக் கூறியுள்ளார். இதன் கருத்தறிந்து நடப்போரே பாக்கியவான்கள். முக்கியமாக பின்வரும் விஷயங்களையாவது கூடுமானவரையில் அனுஷ்டானத்திற்கு கொண்டுவர ஒவ்வொரு மனிதரும் பிரயத்தனப் படவேண்டும். பசுவின் பாலைத்தவிர மற்றபாலைச் சாப்பிடக் கூடாது. நமது இந்துதேசத்தை நாசமாக்கிவரும் காபி, டீ இவைகளை மதுபானமென திண்ணமாக எண்ணி ஒழிக்கவேண்டும்.

எண்ணெ யிட்டுக்கொண்டால் வெந்நீரில் ஸ்நானஞ் செய்ய வேண்டும். பகற்காலத்தில் சையோகமும் நித்திரையுஞ் செய்தல் கூடாது. தன் வயதுக்கு மேற்பட்ட வயதுள்ள மாதரையும் இளவெயிலையும் இச்சித்தலாகாது. மலசலங்களை அடக்கும் வழக்கமே கூடாது. சுக்கிலத்தை யடுத்தடுத்து விடக்கூடாது. படுக்கும்போது இடதுகை கீழாகப் படுக்கவேண்டும். மூலரோகத்தை யுண்டாக்கும் பதார்த்தவகைகளைத் தள்ளவேண்டும். புளித்த தயிரை உபயோகிக்க வேண்டும். அப்போதைக்கப்போது புதிது புதிதாக சமைத்தவைகளையே சாப்பிடவேண்டும். பசித்தாலல்லாது தபாலாபீஸில் எந்தவேளையிலும் யார் யார் எதைப்போட்டாலும் ஏற்றுக்கொள்வதைப்போல் புசிக்கலாகாது. புசித்தவுடனுட்கார்ந்துறங்குதல் நன்மையென்று சயன நூலிற் சொல்லி யிருப்பினும் அதை பகலில் அனுஷ்டிக்கக் கூடாது. அதிபோகமும் கூடாது. ஆறு மாதத்திற் கொருதரம் வாந்தி யாகும்படியாயும், நான்குமாதத்திற் கொருதரம் பேதி யாகும்படியாயும் மருந்துண்ணவேண்டும். ஒன்றரை மாதத்திற்கொருதரம் நசியஞ் செய்துகொள்ளவேண்டும். மாதத்திற்கு 4 தரம் சவரஞ் செய்துகொள்ளவேண்டும். நான்கு தினத்திற்கொருதரம் அப்பியங்கனஞ் செய்யவேண்டும். மூன்றுநாட் கொருதரம் கண்களுக்கு மையிடவேண்டும். வாசனை திரவியங்களையும் புட்பங்களையும் நடுராத்திரியில் ஆக்கிராணிக்கக் கூடாது. இவைகளை கவனித்து நடந்து சுகஜீவிகளாக வாழ எம்பெருமான் இன்னருள் புரிவாராக. சுபம்.

ப. சு. போ. அகத்தீஸ்வர முதலியார்,
இராணி வைத்தியசாலைத் தலைவர், இராணிப்பேட்டை.

---

## உயர்ந்த செல்வம்.

(171-வது பக்கத் தொடர்ச்சி.)

அன்று பகலெல்லாம் மிருத்யுஞ்சயன் காட்டில் ஒரு வழியை கண்டு பிடிக்கலாமென்று அலைந்து திரிந்தனன். இரவு வந்ததும் மிகுந்த

பசியோடும் களைப்போடும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கிராமத்திற்கு வந்து சேர்ந்தனன். மறுநாள் கொஞ்சம் பொரியரிசியை வறுத்துக் கட்டி எடுத்துக்கொண்டு திரும்பவும் புறப்பட்டனன். நடுப்பகலில் ஒரு ஏரிக்கரையினருகே வந்து சேர்ந்தனன். ஏரியைச் சுற்றிலும் காட்டினுள் செல்லும் சில வழிகளின் அடையாளங்கள் காணப்பட்டன. ஏரியின் மத்தியில் நீர் தெளிந்திருந்தும் கரையோரத்தில் நாணல்களும் ஆம்பல்களும் பின்னிக்கொண்டிருந்தன. இடிந்த கற்படிகளின் மூலம் இறங்கி தனது பொரியரிசியை நீரில் நனைத்துத் தின்றுவிட்டு, கட்டடங்களிருந்த அடையாளம் ஏதாவது தென்படுகிறதா என்று கவனமாய்ப் பார்த்துக் கொண்டே ஏரியைச்சுற்றி மெதுவாக நடந்து வந்தனன். ஏரியின் மேற்குப்பக்கம் வந்ததும் அவன் அசைவற்று நின்றனன். அங்கு ஒரு பிரஹ்மாண்டமான ஆலமரத்தின் நடுவில் ஓர் புளியமரம் முளைத்து வளர்ந்திருந்தது. உடனே,

"புளியோடு நிலவிய ஆலின்வாய் நின்று
இயமன் திசைநின் திருமுகம் திருப்புதி."

என்னும் வரிகள் அவன் ஞாபகத்திற்கு வந்தன. இயமன் திசைஎன்பது தென்திசை யாதலின் அவன் தென்திசைநோக்கிச் சிறிது தூரம் நடந்து அடர்ந்த காட்டில் வந்துசேர்ந்தான். அடர்த்தி மிகுதியால் அதற்குமேல் வழி செய்துகொண்டு போவது கஷ்டசாத்தியமா யிருந்தாலும் அவன் புளியமரத்தைப் பார்த்துக்கொண்டே சென்றான். திரும்பி தூரத்தில் பார்த்தபோது மாக்கிளைகளினூடே ஒரு கட்டடத்தின் சிகரம் தோன்ற, அவன் அத்திசைநோக்கிச் சென்று ஒரு பாழடைந்த கோயிலை யணுகினன். அதன் பக்கத்தில் சற்று முன் தான் அவிந்த நெருப்பின் சாம்பல் இருந்தது. மிருத்யுஞ்சயன் மிகு எச்சரிக்கையோடு ஒரு உடைந்த கதவண்டை சென்று உள்ளே எட்டிப்பார்த்தான். அங்கு ஒருவரும் இல்லை; ஒரு விக்ரகம்கூட இல்லை; ஒரு கம்பளமும், நீர்க்குடமும், அதன் பக்கத்து ஒரு சன்யாசியின் உத்தரீயமும் மாத்திரம் கிடந்தன.

பொழுது சாய்ந்துகொண் டிருந்தமையானும், கிராமம் மிகு தூரத்திலிருந்தமையின் இரவில் வழிகண்டு திரும்பிச்செல்வது கஷ்டமாதலினாலும், மிருத்யுஞ்சயனுக்கு மனிதவாசத்தின் குறிகளைக்காண சந்தோஷமே உண்டாயது. கதவின் பக்கத்தில் ஒரு பெருங்கல் விழுந்திருந்தது. அவன் அதன்மீதுட்கார்ந்து ஆழ்ந்து யோசித்துக்கொண் டிருக்கும்போது அக்கல்லின்மேல் ஏதோ எழுதப்பட்டிருந்ததைக் கண்டான். உற்றுப்பார்த்தபோது ஒரு வட்டமான குறியொன்று தென்பட்

டது. அக்குறியை முன்னமே அவன் கண்டிருக்கிறான். அது கொஞ்சம் கலைந்திருந்ததாயினும், தான் இழந்துவிட்ட கடிதத்தின் முகப்பில் இருந்த குறிதான் அது என்று அவன் கண்டுகொள்ளப்போதிய தெளிவா யிருந்தது அது. அவன் பலதரம் அதனைப் படித்துளானாதலின் அதன் வடிவம் அவனது மனதில் நன்றாகப் பதிந்திருந்தது.

நடுராத்திரியில் கற்பூர சாம்பிராணி வாசனை நிறைந்த ஆலயத்தினுள் மங்கலான வெளிச்சத்தில் காளியின் முன் தான் உட்கார்ந்து அவ்விரகசியக் குறியின் பொருளை தனக்கு விளக்கும்படி தேவியை எத்தனை தரம் வேண்டியிருப்பான். தான் வெகுகாலமாகக் கொண்டிருந்த விருப்பம் சமீபத்தில் நிறைவேறும்போல் தோன்றிற்றாதலின் அவனுக்கு உடல் நடுங்கிற்று. ஏதாவது சிறு தப்பிதத்தினால் தன் காரியத்துக்கு தான் இடையூறிழைத்து விடுவனோ என்றும், முக்கியமாக தனது செல்வத்தை கண்டுபிடிக்கும் வேலையை சன்யாசி முன்னமே ஆரம்பித்து விட்டாரோ எனப்பயந்தும் அவன் உடல் நடுங்கினான். அவனுக்குயாதுசெய்வதென்று தோன்றவில்லை. தனக்குத் தெரியாமலேதான் அவ்வளவற்ற செல்வத்தினருகில் வந்து சேர்ந்திருப்பினும் இருக்கலாமெனு மெண்ணம் அவனுக்குண்டாயிற்று. காளியின் நாமோச்சாரணத்தோடு அவன் உட்கார்ந்த போது மாலைக்காலம் கால்கொண்டோட கானகத்தின் காரிருள் சிள்வண்டுகளின் ரீங்கார சப்தத்தைத் தனக்குத் துணையாகக்கொண்டு விரைந்துவந்து தனது அரசை நிறுவிற்று.

## V.

அவன் யாது செய்வதென்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் தூரத்தில் எரிந்துகொண்டிருக்கும் நெருப்பின் பிரகாசத்தை இலைச் செறிவுகளின் நுழைச்சந்துகளின் மூலமாகக் கண்டனன். அவன் அக்கல்லினின்று எழுந்து அவ்விடத்தை நன்றாய்க் கவனித்துக்கொண்டு வெளிச்சந்தோன்றும் திசைநோக்கி சென்றனன். மிகக் கஷ்டப்பட்டு சிறிது தூரம்சென்று ஒரு மரத்தின்பின் மறைந்திருந்து தான் தேடிக்கொண்டிருந்த அச்சன்யாசி அதேகடிதத்தைக் கரங்கொண்டு அங்குநின்று அக்னிப் பிரகாசத்தில் கடிதத்தைப் பிரித்துப்பார்த்து அங்குள்ள சாம்பலில் ஒரு குச்சியால் எழுதி அதன் பொருளை யறிய முயற்சித்துக் கொண்டிருந்தார்.

அவனது பாட்டனாலும் தகப்பனாலும் பாதுகாக்கப்பட்டு பிறகு மிருத்யுஞ்சயனுக்கு சொந்தமாயிருந்த அந்தகடிதம் ஒரு வஞ்சகத்திருடன்

கையிலிருக்கிறது. இதற்காகத்தான் அத்திருட்டுச் சன்யாசி முன்னும் மிருத்யுஞ்சயனை இழந்த பொருளைப்பற்றி வருந்தாதிருக்கும்படி சொன்ணன்

சன்யாசி அக்குறிகளின் பொருள்களை கணக்கிட்டுக்கொண்டும், அடிக்கடி ஒருகடியால் தரையில் தூரங்களை அளந்து கணக்கிட்டுக் கொண்டுமிருந்தார். சிலபோதுநின்று புதிதாக கணக்கெடுப்பார். இவ்வாறு இரவெலாம் கழிந்து, காலையில் வீசும் இளங் குளிர்காற்று இலை செறிந்த மரக்கிளைகளினூடே வீச ஆரம்பிக்க சன்யாசி கடிதத்தை சுருட்டிக்கொண்டு போய்விட்டார்.

மிருத்யுஞ்சயன் மனக்குழப்ப மடைந்தான். சன்யாசியினுதவியின்றி அக்கடிதத்தின் பொருளைத் தெளிதல் அசாத்தியமென்று அவனுக்கு நன்ருய்த்தெரியும். அதைப்போலவே பேராசையுள்ள சண்டாளச் சன்யாசி தானறிய இவ்விஷயத்தில் தனக்கு உதவி புரியமாட்டாரெனென்பதும் தெரியும். சன்யாசியை மறைவிலிருந்து கவனித்து அறிந்து கொள்வதே தகுந்தவழி.

கிராமத்துக்கு போகாமல் ஆகாரம் கிடைக்காதாதலின் மிருத்யுஞ்சயன் அன்றுகாலை தானிறங்கியிருக்கு மிடத்திற்குப்போக நிச்சயித்தான். போதுமான வெளிச்சம் வந்ததும் மாத்தின் மறைவிலிருந்து வெளிவந்து சன்யாசி கணக்கிட்டுக்கொண்டிருந்த சாம்பலின் அருகுவந்து பார்த்தான். தான் எக்குறிகளையும் போட முடியவில்லை. பலதரம் சுற்றிப் பார்த்ததின்மேல் அவ்விடம் காட்டின் மற்றப்பாகங்களோடு எவ்விதத்தினும் மாறுபட்டிருக்கவில்லை என அறிந்தனன். சூரிய வெளிச்சம் மரங்களினூடே நுழைய ஆரம்பித்ததும் மிருத்யுஞ்சயன், கிராமத்தைநோக்கிப் புறப்பட்டு இருபுறமும் பார்த்துக்கொண்டே சென்றனன். சன்யாசி எங்கே தன்னைப் பார்த்துவிடுகிருரோ என்ற பயமும் மனதிலிருந்தது. மிருத்யுஞ்சயன் இறங்கியிருந்த கடையில் அன்று பிராம்மணர்களுக்கு ஓர் விருந்திடப்பட்டமையின் மிருத்யுஞ்சயனுக்கு அன்று திருப்தியான போஜனம் கிடைத்தது. அதிகநேரம்பட்டினிகிடந்தமையின் அதிகமாகச் சாப்பிடாமலிருக்க முடியவில்லை. அதிகமாக சாப்பிட்டமையின் அவன் தனது பாயில் படுத்து அயர்ந்து நித்திரைபோயினன். இரவெல்லாம் தூங்கவில்லையாயினும் மிருத்யுஞ்சயன் அன்று சரியானவேளையில் சாப்பிட்டுவிட்டு மாலை சீக்கிரமே புறப்படுவதாக தீர்மானித்திருந்தனன். நினைத்ததொன்று நடந்ததொன்ருக முடியவே அவனெழுந்திருக்கும் போது சூரியன் அஸ்தமித்துவிட்டது. இருளும் அதிகமாய்க் கொண்

டிருந்த தாயினும் அவன் நின்றுவிட முடியவில்லை. இரவும் சீக்கிரமாகவே வந்தது. அடர்ந்த காட்டிருளில் அவன் வழிகண்டுபோக முடியவில்லை. தான் எவ்வழியில் போய்க்கொண்டிருக்கிறு னென்பதும் அவனுக்குத் தெரியவில்லை. பொழுது புலர்ந்ததும் கிராமத்தின் அருகிலுள்ள காட்டிலேயே அவன் சுற்றித் திரிந்துக்கொண்டிருந்ததாக தெரியவந்தது. அருகே ஊரத்துகத்தின சில காகங்களின் சப்தம் அவனை அவை ஏளனம் செய்வதுபோல் தோன்றிற்று. (தொடரும்.)

ச. கந்தசாமி முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

---

# வேமன யோகியின் ஜீவிய சரித்திரமும் அவர் மொழிந்தருளிய பாடல்களும்.

(115-வது பக்கத் தொடர்ச்சி).

## வேமனரின் ஸ்தல, கால, குல, குடும்ப, நிர்ணயத்தின் அபிப்பிராய பேதங்கள்.

### கால நிர்ணயம்.

முன்னொரு சஞ்சிகையில் வேமனர் பிறந்த ஸ்தலம் "கொண்ட வீடு" என்று, கிடைத்த சில அத்தாக்ஷிகளிலிருந்து நிரூபிக்கப்பட்டது. அவர் எந்த காலத்தில் இருந்தவர், எப்பொழுது பிறந்தார், எப்பொழுது சமாதி அடைந்தார் என்பதை இச்சஞ்சிகையில் நாம் ஆராய்வது அவஸ்யமே. எவ்விதம் ஸ்தல நிர்ணயத்தில் அபிப்பிராய பேதங்கள் பல உளவோ அங்ஙனமே காலநிர்ணயத்திலும் அபிப்பிராயம் பேதப்படுகிறது. ஆயினும் கிடைக்கும் தக்க ஆதாரத்தைக் கொண்டு அவருடைய காலத்தை நிச்சயம் செய்ய முடியுமா என்று பார்க்கலாம்.

ப்ரௌன் (Brown) துரை வேமனர் 17-வது நூற்றுண்டில் பிறந்தவர் என்றும், கேம்பேல் துரை இவர் 300 வருஷங்களுக்கு முன்பு பிறந்தார் என்றும், பூர்னயாசாரியார் இவர் 500 வருஷங்களுக்கு முன்பு பிறந்தார் என்றும் சொல்லுகிருர்கள்.

இவர் காலத்தை நிர்ணயம் செய்வது சுலபமல்ல. இதர கிரந்த கர்த்தர்கள், ப்ரௌன், கேம்பெல், பூர்னயாசாரியார் முதலானவர்களின் அபிப்பிராயங்களை அனுசரித்து கால நிர்ணயத்தை செய்தார்கள். ஆனல் அவைகள் வழங்கும் கதைகளை அனுசரித்ததே ஒழிய 1920-ம் வருஷம் வரையில் இவ்விஷயத்தில் உண்மை புலப்படவில்லை.

1920-ம் வருஷம் நடைபெற்ற வேமன ஜயந்தி யன்ற எல்லா கிரந்தங்களையும் பரிசிலித்து ஸ்ரீமான் கே. வி. லக்ஷ்மணராவ் பந்துலு காரு பின்வருமாறு எழுதுகிருர்.

"இவர் காலத்தைக்குறித்து விசாரிப்போம். இவர் 17-வது நூற்ருண்டில் பிறந்தவர் என்று ப்ரௌன்துரையும், 18-வது நூற்ருண்டில் பிறந்தவர் என்று மெக்லீன் துரையும் எழுதி யிருக்கிருர்கள். வேமன யோகிந்திரர் சரித்திரத்தை எழுதியவர், இவர் கொண்டவிடு ப்ரபுவான ராசவேமாரெட்டியின் தம்பி யென்கிருர். ஆனுல் இதற்கு ஒரு விதமான ஆதாரமும் காட்டவில்லை. வம்சாவளியும் இதில் சரியாயில்லை. வருஷங்கள் புரண்டு கிடக்கின்றன. கொமரகிரி ரெட்டி என்பவருககு கோமிடி வெங்காரெட்டி, ராசவேமாரெட்டி, வேமனயோகி என மூன்று பிள்ளைகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. சாஸனாதிகளை வைத்துக் கொண்டு பார்க்கும் பக்ஷத்தில் கொமரகிரிரெட்டி 1380—1400 வரையில் இராஜ்ஜிய பரிபாலனம் செய்துவந்தார். அவர் அனபோதா ரெட்டியின் மகன். இவர் தங்கை புருஷனே காடய வேமரெட்டி. கொமரகிரி ரெட்டிக்கு சந்தானம் இல்லாததினுல் நம் திவ்ய சரித்திரகாரருடைய தமையனுகிய மாசன வேம ரெட்டியின் பௌத்ரனுன கோமிடி வேமா ரெட்டி சிம்ஹாஸனம் ஏறி 1400—1420 வரையில் பரிபாலனம் செய்து வந்தார். இவர் குமாரரே ராசவேமாரெட்டி. இவர் 1420—1424 வரையில் இராஜ்ய பரிபாலனம் செய்தார். இவர் கொண்டவிடு ராஜாக்களில் கடையானவர். இவரே நிஜமாக வேமனருடைய தமையனுக இருந்தால் வேமனர்15-வது நூற்ருண்டுக்கு முன்பே பிறந்தவராக இருக்கவேண்டும். இவர் ராசவேமா ரெட்டியின் தம்பியாய் இருந்தால் பெதகோமிடி வேமன ரெட்டி இவருக்கு தகப்பனுய் இருக்கவேண்டும். இந்த ராஜ சபையில் ஸ்ரீநாதர் கவீஸ்வரராய் விளங்கினுர். இந்த காலம் நிச்சயமானுல் வேமனர் ஸ்ரீநாதரின் காலத்தில் இருந்தாரென ஐயப்படவேண்டியதில்லை."

ஆகவே வேமனர் இவ்வளவு புராதனமாய் பிறந்தவரா என்ற சம்சயம் மாத்திரம் உண்டாகிறது. எப்படியாயினும் இவ்வளவு புராதன காலத்தில் ஜனித்தவராயின் எந்த கவியாவது இவரை பூர்வ கவியாக

புகழாமல் போவார்களா? பிராம்மண ரல்லாமையால் இவரை புகழா விட்டாலும் ப்ராஹ்மணரல்லாத கவிகளாவது இவரை புகழ்ந்திருக்க வேண்டும். லக்ஷணகவியா யில்லையென்று இவரை விட்டுவிட்டிருக்க லாம். எதையும் திடமாகச் சொல்வது மிகவும் கஷ்டம். இவரை இதரார்கள் புகழாதிருக்கும் காரணத்தினாலும், இவர் இதரார்களை புகழாதிருக்கும் காரணத்தினாலும் இவருடைய ஜீவிய காலத்தை நிர்ணயிப்பது மிகவும் அசாத்தியமா யிருக்கிறது.

வேமன பத்யங்களில் ஒன்றில்,

"திருமல குனுபோவ துருக தாசரிகாடு,
காசிபோவ லஞ்செ கரித காது.
குக்க சிம்ஹமகுனெ கோதாவரிகிபோவ,
விஸ்வதா பிராம வினுர வேமா." அதாவது,

"திருமலைக்குப் போனால் துருக்கன் பக்தனாகான். காசிக்குப் போனால் தாசி பதிவிரதை யாகாள். கோதாவரியில் ஸ்நானம் செய்த நாய் சிம்ஹம் ஆகுமா?" என்று காண்கிறது. ஆந்த்ர தேசத்தில் துருக்கப் பிரபுத்வம் ரெட்டி இராஜ்ஜியம் போனபிறகே ஆரம்பித்தது. ஆகையால் இவர் 15-வது நூற்றாண்டுக்கு முன் இல்லை என்பது திண்ணம். பிறகு எப்பொழுது அவதரித்தாரோ சொல்வதரிது.

வேமனர் ப்ரயோகம் செய்த துருக்க வார்த்தைகளிலிருந்து இவர் ஆந்த்ர தேசம் துருக்க ஸாம்ராஜ்ஜியத்தில் வந்தபிறகே உபயோகப்பட்டிருக்கவேண்டுமென்பது ஸ்பஷ்டம். "குல்லாபு, முஸாபு, துருக," எனும் பதங்கள் வேமன பத்யங்களில் பார்க்கலாம். இதிலிருந்து இவர் 14-வது நூற்றாண்டுக்கு பிந்தியவரோ என்று புலப்படுகிறது.

வேமன பத்யங்களிலிருந்தே இவர் கால நிர்ணயம் செய்ய மார்க்கமுளதோ என பரிசீலிப்பது வீணல்ல. ஒரு பத்யத்திலிருந்து ராயபாஸ்கர கவிக்கு பிந்தியவர் எனப் புலப்படுகிறது. இந்த ராயபாஸ்கரர் யாவர்? இருவர், மூவர், இப்பெயருடன் ஆந்த்ர சரித்திரத்தில் விளங்குகிறார்கள். இம்மூவரில் எந்த ராயபாஸ்கரரைப் பற்றி வேமனர் புகழ்கிறார் என தெரிந்துகொண்டால் அந்த ராயபாஸ்கரருக்கு சமானகாலத்திலாவது அல்லது அந்த கவிக்கு கொஞ்சம் பிந்தியாவது வேமனர் இருந்தார் என லாம். கிருஷ்ணதேவராயருக்கு பூர்வத்தில் காடய வேமன சபையில் அதாவது 1386-ம் வருஷத்தில் ஒரு ராயபாஸ்கரர் இருந்ததாக தெரிகிறது.

கிருஷ்ணதேவராயருக்கு பிறகு 1516-ல் ஒரு ராயபாஸ்கரரும், 1529-ல் ஒரு ராயபாஸ்கரரும் இருந்ததாக ப்ரபல ஆதாரங்களிலிருந்து நாம் அறியலாம். 1386-ம் வருஷத்திய ராயபாஸ்கரரை வேமனர் புகழ்ச்சிசெய்கிறாரா அல்லது வேறு எந்த ராயபாஸ்கரரை என்பது சந்தேஹத்திற்கு இடமாயிருக்கிறது. (தொடரும்.)

வி. ஸி. இராமசுவாமி ஐயர்,
உபாத்தியாயர்,
முனிசிபல் ஹைஸ்கூல், வாலாஜா பேட்டை.

---

## பள்ளிக்கூட ஆசிரியன்.

'மாடர்ன் ரெவ்யூ' என்ற மாதாந்தப் பத்திரிகையின் 1924-ம் வருஷம் அக்டோபர் மாதத்திய பகுதியில் கவிசிரேஷ்டர் சர் ரவீந்த்ரநாத் டாகூரால் எழுதப்பெற்ற வியாசத்தின் முக்கியாம்ச மொழி பெயர்ப்பு.

எனக்கு வயது ஐந்து ஆனவுடன் நிர்ப்பந்தத்தின் மேல் பள்ளிக்கூடத்திற்குச் சென்றபோது இயற்கைச் சுகிர்தம், யதேச்சை, மனோரம்மியம் முதலியன இன்றி சுற்றியிருக்கும் இயற்கைக்கு மாறுபட்ட பாடங்களைப் படிக்க என்மனம் சம்மதிக்கவேயில்லை. அழகு மிகுந்த இயற்கையாகிய இன்ப இருக்கையை விட்டு ப்ரஷ்டம் பண்ணப்பட்டவனைப்போலிருக்கவும், கூட்டிலடைக்கப்பட்டு வெளிப்புறமிருந்து இரையிடப்பட்டு வளர்க்கப்படும் குருவியை யொத்தவனாய், பள்ளிக்கூடமாகிய கூண்டில் அடைக்கப்பட்டு பிறரால் போதிக்கப்படும் கல்வியாகிய இரையை யுண்டு வளரவும், நேர்ந்தது. நான் சிறுவனாயினும், பள்ளிக்கூடத்தார் என்னைக் கையாண்டமுறை என மனதில் மானபங், உணர்ச்சியை விசேஷமாய் உண்டாக்கியது.

நமது குழந்தைகள் குழந்தைகள்தாம் என்ற உண்மையை நமது கல்விமுறை நிராகரிக்கின்றது. பாவம்! நமது குழந்தைகள் வயதில் முதிர்ந்த பெரியாரைப்போல் நடந்துகொள்வதில்லை யென்றும் சிறுபிள்ளைத்தனத்தோடு கூடிய இரைச்சல், விஷயம் முதலியன அமைந்த நடத்தையை யுடையவராய் இருக்கின்றனர் என்றும் தண்டிக்கப்படுகிறார்கள். போதிக்கும் ஆசிரியவர்க்கத்தினர் அத்தகைய விஷமச் செயல்

கள் குழந்தைகளின் இயற்கை இயல்பின்பாற் பட்டவை யென்பதையும், அமைதியின்றி எப்போதும் உழைக்கும் மனப்பான்மையோடு கூடிய நமது குழந்தைகள் இடைவிடாது ஓடியும் விளையாடியும் புதிய புதிய அனுபவங்களையும் விஷயங்களையும் தாமே தற்செயலாய் அடைவதே அவரது அறிவு விருத்திக்கேற்ற வழி யென்பதையும், அறியாமலும் அங்கீகரிக்காமலும் இருக்கின்றனர். ஆகவே இயற்கையும் ஆசிரியனும் யுத்தஞ்செய்யும் போர்க்களமாகின்றான் நமது குழந்தை.

நமது குழந்தைகள் தம்மனத்தை ஒரு வழிபடுத்தியே கல்வி கற்க வேண்டுமென்பது நமது ஆசிரியரது சித்தாந்தம். ஆனால் இயற்கையின் கதி என்னவோவெனில் அவர் தமது மனதை பலவழிப்படுத்துதலினால் தான் குழந்தைகள் தமது அறிவை விசாலித்துக் கொள்ளுகின்றார்கள் என்பதே. மனப்போக்குக்களிலும் நமது மனதைச் செலுத்தியே எதிர் பாராது அகஸ்மாத்தாய் புதிய விஷயங்களை நாம் நமது இளம்பருவத்தில் கண்டறிந்தோம். எதிர்பாராமையோடு கூடிய பிரமிப்பும் அதிசயமும் நம்மிடம் ஒரு திகைப்பை எற்படுத்தவே அத்திகைப்பின் பான்மையால் உலகத்தின் பாற்பட்ட விஷயங்களைத் தீவிரமாய் அறிந்துகொள்ள நமக்கு ஏதுவாயிருந்தது. நமது குழந்தைகளின் மனக்கிளர்ச்சிக்கும் ஊக்கத்திற்கும் புதுமை அவசியம். அத்தகைய புதுமையோடு விஷயங் கள் தோன்றின, அவரது மனோமுயற்சி விசேஷமாய் ஓங்கி நிற்கும். ஆனால், தற்போதைய பள்ளிக்கூட நிர்மாணத்தில் குழந்தைக்ள் சாந்த மாய் ஆசிரியர் புகட்டுவதைச் செவிவாயாக நெஞ்சுகளாக விடாது உள்ளத்தமைக்கவேண்டி யிருக்கின்றது. இவ்வித நிர்ப்பந்தம் என்னால் சகிக்க முடியவில்லை.

குழந்தைப் பருவத்தில் முதன்மையாய்த் தோன்றுவது லக்ஷிய மின்மையே. ஆனால் வயது முதிர்ந்த பருவத்திலோவெனில் நமது வாழ்க்கையானது குறித்த சில லக்ஷியங்களாலான ஒரு பெரும் மூட்டை யென்றே சொல்லவேணடும். அவ்விலக்ஷியங்களுக்கேற்ற விஷயங்களை நாம் அங்கீகரித்தும் பிறவற்றைத் தள்ளியும் போடுகின்றோம். அவ் விலக்ஷியங்களே நமது மனதை முழுதும் கவருகின்றன. மேலும் பிற வேண்டா விஷயங்களைப் புறக்கணிக்கவும் செய்கின்றன. ஆகவே ஒரு நதியானது குறுகிய ஒரு கதியைக் கடைப்பிடித்து ஒடுங்கிச்செல்வது போல நாம் நமது லக்ஷியங்களுக்கேற்பவே நமது வாழ்க்கையை ஒரு வழிப்படுத்துகின்றோம். ஆனால் ஒரு குழந்தையோவெனில் சுகமாய் ஜீவிப்பதைத் தவிர வேறு தனக்கென ஒரு குறிப்பான லக்ஷியத்தை அடையப்பெறாததாதலின் தன்னைச் சுற்றிநிற்கும் எவற்றையும் புறக்

கணிக்காது விஷயங்கள் யாவற்றையும் சர்வ சுயேச்சையோடு கவனிக் கின்றது. ஆகவே தனக்குக் காணக்கிடைக்கும் விஷயங்களை தனக்கு ஏற்றது இன்னது என வரையறுக்காது கண்டது கேட்டது யாவற்றை யும் தன் மனத்தின் பால் அமைத்துத் தனது அறிவை விருத்தி செய் கின்றது. இடறி விழுந்தவன் மாணிக்கத்தைக்கண்டு களிப்பதுபோல் அடிக்கொரு உண்மையையும் நொடிக்கொரு விஷயத்தையும் தானாகவே கண்டு களிக்கின்றது. மேலும் அதன் அறிவு விருத்தியின் பான்மை ஒரு சிறு நீர் அருவி கற்களும் முட்களும் நிறைந்து கிடக்கும் இடத்தில் பாயும்பொழுது அவ்விடரின் காரணத்தினாலேயே அதன் வேகம் அதிக ரிப்பதுபோல, குழந்தையும் தான் இடுக்கண் இடரின் பாற்படுவதன் காரணமாகவே தனது மனோவலிமையும் வேகமும் அதிகரிக்கப் பெறு கின்றது. (தொடரும்.)

ஏ. சௌரிராஜுலு நாயுடு, பி.ஏ., எல்.டி.

---

## ஸர் ஜெகதீச சந்திர போஸின் ஆராய்ச்சிகள்.

(184-ம் பக்கத்தொடர்ச்சி.)

எந்தச் செடிகொடிகளை எடுத்தபோதிலும் போஸின்கருவிகளைக் கொண்டு பரிசீலனை செய்யும்போது அவைகள் மனிதனைப்போலவே காணப்படுகின்றனவேயன்றி வேறல்ல. பேசும் திறமைமாத்திரம் அவை களுக்கில்லை. மற்ற எல்லா விஷயங்களிலும் அவை மனித வர்க்கத்தைப் போலவே இருக்கின்றன. அவைகளை ஊமை மனிதர்கள் என்று சொன் னாலும் சொல்லலாம். ஏனெனில் அவைகள் அக்கருவிகளைக் கொண்டு தங்கள் அனுபவங்களை எழுதுவதானது ஓர் ஊமையன் தன் அபிப்பிராய ங்களையும் உணர்ச்சிகளையும் கடிதத்தில் எழுதிக் காண்பிப்பதுபோ லிருக் கிறது. அவை எழுதும் பாஷையானது நமக்குத்தெரிந்த தமிழ் அல்லது இங்கிலீஷ் பாஷையாக இல்லாவிடினும் நமக்கு விளங்கக் கூடியதும் அதன் சொந்த பாஷையுமாகிய கோடு புள்ளி முதலியவைகளால் எழுது கின்றன. விவேக மானிட ஜென்மத்தை எடுத்தவர்களுக்கே முக்கால் பங்குக்குமேல் எழுதப் படிக்கத் தெரியவில்லை என்றால் அவைகளுக்கு நம் பாஷையில் எழுதத் தெரியாதது ஓர் குற்றமாகாது.

ஸர் போஸ் ஒரு செடியைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கும் போது ஆகாயத்தில் ஒருமேகம் சஞ்சாரம் செய்கிறது. அதனுல் வெளிச் சமானது குறைந்து சொல்ப குளிர்ச்சியும் ஏற்படுகிறது. அதனுல் அச் செடியின் உத்ஸாகம் குறைந்து வர்ஷாகாலத்துப் பகல்வேளையில் நமக்கு எப்படி இருக்குமோ அதேவிதமாக ஆகிவிடுகிறது.

ஸர் போஸ் ஏதாவதொரு பூண்டை யெடுத்து ஒரு கருவியில் சேர்த்துவிட்டு அதில் Chloroform என்னும் போதை மருந்தை ஊட்டி விடுகிருர். அது மயக்கமடைந்து யாதொரு உணர்ச்சியுமில்லாமல் பிணம்போல் நின்றுவிடுகிறது. வேறு சில செடிகளை எடுத்து அவை களில் சாராயத்தை ஏற்றிவிடுகிருர். அவை வெறிபிடித்தவைபோல் கண்டபடி பென்சிலால் கிருக்குகின்றன. அதிகமாகச் சாராயத்தை ஏற்றி விடுகிருர். மயக்கமாக நின்று விடுகின்றன. அடிக்கிருர். களைப்படைந்து விடுகின்றன. ஊசியினுலோ கத்தியினுலோ காயப்படுத்துகிருர். நம் தேகத்தில் குத்தினுல் ரத்தம் வருவதுபோல அவைகளில் ஒருவித நீர் வெளியாகிறது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவை சக்தியற்றுப் போய் விடுகின்றன. (அடித்தாலும் உணர்ச்சியில்லாத மனிதர் அநேகரை நாம் பார்த்திருக்கிறேம். இவர்களை விட இச்செடிகொடிகள் எவ்வளவோ மடங்கு மேலானவையல்லவா?)

"நாம் சுவாசம் விடுகிறேம் நம்முடைய சுவாசப்பையானது எப் போதும் அடித்துக்கொண்டும் ரத்தம் எந்நேரமும் ஓடிக்கொண்டும் இருக் கின்றன. இதைப்போல் செடி கொடிகளிலும் சுவாச ஓட்டம் இருக் கிறதா?" எனச்சிலர் கேட்கலாம். "இருக்கிறது" என்று ஸர் போஸ் தம் கருவிகளைக்கொண்டு நிரூபிக்கிருர். எங்கும் சாதாரணமாகக் காணப் படும் Telegraph Plant என்னும் செடியின் இலைகள் இடைவிடாது மேலும் கீழும் அசைந்துகொண்டே இருப்பதை அநேகர் கண்டிருக்கலாம். காற்றில்லாதபொழுதுகூட அவைகள் அவ்விதமாக அசைந்துகொண் டிருக்கக் காணலாம். போஸ் இச்செடிகளில் ஒன்றை எடுத்து போதைக் காற்றடங்கிய ஓர் இடத்தில் வைத்து விடுகிருர். எப்படி போதைக் காற்றை உட்கொண்டால் கொஞ்சங் கொஞ்சமாக மனிதனுடைய சுவா சம் நிற்கத் தலைபடுகிறதோ அதுபோல இச்செடியின் இலைகள் மேலும் கீழும் அசைவது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது. அவ்விடத்தில் கொஞ்சம் நல்ல காற்று வீசும்படி செய்தால் அவைகள் முன்போல அசை கின்றன. இதை நாம் அச்செடியின் சுவாசம் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லமுடியும்.

நாம் பகலில் வேலை செய்கிறோம். இரவில் தூங்குகிறோம். ஸ்தாவரங்கள் அவ்விதம் செய்கின்றனவா? என்றால் அவைகளுக்கும் 'ஜாக்கிராவஸ்தை' 'சுழுப்தியவஸ்தை' இவைகள் உண்டு என்பதை ஸர் போஸ் அநேக உதாரணங்களைக்கொண்டு நிரூபிக்கிறார். இவைகளில் இரண்டொன்று நமக்குப்போதுமானவை. நம் தேசத்தில் "தூங்குமூஞ்சி மரம்" என்றோர் மரத்தை ஒவ்வொருவரும் பார்த்திருக்கலாம். அதன் இலைகள் மாலைப்பொழுதில் சூர்யாஸ்தமானவேளையில் இரண்டிரண்டாய் ஒன்றுசேர்ந்து கீழ்நோக்கித் தொங்குகின்றன. காலை கதிரவன் உதயமானதும் ஒன்றைவிட்டொன்று பிரிந்து நிமிர்ந்து நேரே நிற்கின்றன. இராக்காலங்களில் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு தூங்குவதுபோல் காணப்படுவதால் இம்மரத்துக்குத் தூங்குமூஞ்சிமரம் எனப் பெயர் வருவதாயிற்று. நமது தடாகங்களில் காலையில் தாமரைமொட்டு மலர்வதையும் அல்லிப்புஷ்பம் மூடிக்கொள்வதையும் நாம் பார்த்திக்கிறோம். இப்புஷ்பங்கள் மலர்வதும் மூடிக்கொள்வதும் அவைகளின் "ஜாக்கிர" "சுஷுப்தி" அவஸ்தைகளே யன்றி வேறல்ல. ஸர் போஸ் தன் கருவிகளைக் கொண்டு இம்மாதிரியான மாறுபாடுகளுக்கு வெளிச்சம் சீதோஷ்ணம் முதலியவைகளின் மாறுபாடுகளும் அவைகளின் சரீர அமைப்புமே காரணங்களெனக் கண்டுபிடித்திருக்கிறார். (தொடரும்.)

K. நடேச அய்யர், B. A., L. T.,
சித்தூர்.

---

## "நாகரீகம்."

(181-ம் பக்கத் தொடர்ச்சி).

இனி, உண்மை நாகரீகம் எது? அதனுடைய அடையாளங்கள் எவை? என்பவைகளைச் சற்று ஆராய்வோம். எதனால் மனிதசாசிகளனைத்தும் முன்னுக்குவர முடியுமோ, எதனால் மனிதனுடைய ஆன்மாவும் இந்திரியங்களும் சரீரமும் வளர்பிறைச் சந்திரனைப்போல தினே தினே அபிவிருத்தி யடையுமோ, எதனால் மனிதன் தன்னைத்தான் அறிந்துகொள்வனோ, எதனால் மனிதன் இவ்வுலகில் எடுத்த மானிட ஜென்மத்தின் பலனைப் பெறுவனோ, எதனால் அவன் ஆசையும் துன்பமும் நிறைந்த ஸம்ஸாரமென்னப்படும் ஜனன மரணமாகிய இச்சமுத்தி

ரத்தைக் கடந்து தனக்குச் சாசுவதமான நித்தியானந்த நிலையை அடைவனே, அதுவே நாகரீக மென்னப்படும். அது யாதெனில் அதுவே "நல்லொழுக்க" மாம். சிலர் அதை "ஸ்வதர்மம்" என்றும், "கடமை" என்றும், "ஸன்மார்க்கம்" என்றும் கூறுவர். மகாத்மா காந்தி "இந்திய சுயராஜ்யம்" என்னும் புத்தகத்தில் "மனிதனுடைய கடமையைச் சரிவரச்செய்வதற்கு வழிகாட்டியாக இருக்கும் நடத்தையே நாகரீக மெனப்படும்" என்று சொல்லியிருக்கிறார். கடமையைச் செய்வதற்கு வழிகாட்டியாக இருக்கும் நடத்தை அல்லது மார்க்கத்தையே "நன்னடத்தை அல்லது "ஸன்மார்க்கம்" எனப் பெரியோர் கூறுவர். "நல்லொழுக்கம்" என்பதில் "பொய் பேசாமை", "களவாமை", "கொல்லாமை", "ஊன் தின்னாமை", "மதுபானம் செய்யாமை' முதலிய நிஷேதங்களும், "வாய்மை" ஜீவகாருண்யம், தர்மம் செய்தல், பிறரை சமமாக பாவித்தல், ஈச்வர பக்தி செய்தல் முதலிய விதிகளும் அடங்கியுள்ளன. நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளும் ஒவ்வொருவனும் இந்திரியங்களைக் கண்டவழிகளில் செல்லவிடாமல் ஜயிக்கவும், மனதை அடக்கவும், சாதுக்களின் சங்கத்தை நாடவும், பெரியோர்களைப் பின்பற்றவும், அதனால் ஞானத்தைப் பெறவும், தன்னைத்தான் அறியவும் திறமை பெற்று தன் நல்லொழுக்கத்தின் விடாமுயற்சியினால் நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து கடைசியாக பிறவிப்பயனை அடைகிறானதலின் நல்லொழுக்கமே உண்மை நாகரீகமாகும். எந்த நாகரீகமானது நல்லொழுக்கத்தை நிலை நிறுத்தி மனிதனை நற்கதியில் சேர்க்கிறதோ அதுவே உண்மை நாகரீகம். மற்றவையெல்லாம் அநாகரீகம் என்பதில் சந்தேகமில்லை. எவை எவை மனிதனுடைய இந்திரியங்களையும் மனதையும் ஆன்மாவையும் நல்வழியில் செலுத்தி அவனை ஸன்மார்க்கத்தில் நிறுத்துகின்றனவோ அவைகளே நாகரீகத்தின் அடையாளங்கள். மற்றவை நாகரீகத்தைக் கெடுக்கவந்த விஷநோய்களின் அடையாளங்களே.

நல்லொழுக்கமே உண்மை நாகரீகத்தின் அடையாளமாயின் இந்தியா இது விஷயமாக மற்றதேசங்களிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. மற்ற தேசங்களே இந்தியாவிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டிய நிலைமையிலிருக்கின்றன. ஏனெனில் இந்தியர்கள் எக்காலத்திலும் எவ்வளவு குரூரமான இடையூறுகளிலும் நல்லொழுக்கத்தைக் கைவிடாததுமன்றி அதையே தங்கள் உயிர்நிலையாகக் கருதிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்திய ராஜ்யம் இவ்வளவு காலம் நீடித்திருந்ததற்கும் இதற்குப்பின் ஏற்பட்ட நூற்றுக்கணக்கான ராஜ்யங்கள் இருந்தவிடம் தெரியாமல் சாம்பலானதற்கும் இதுவே காரணம் எந்த ராஜ்யத்தில் ஜனங்கள் நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளுகிறார்

களோ அதுவே உண்மை நாகரீகமுடையது, அதுவே நீடித்து நிற்கும். மற்றவை தீய ஒழுக்கத்தின் கொடுமையால் சீக்கிரம் நசிக்கவேண்டிய வைகளே. இவ்விஷயத்தை அநேக ஐரோப்பியர்களே பன் முறையும் உரைத்திருக்கின்றனர். இது சம்பந்தமாக ஸர் ஜான் உட்ரோப் (Sir John Woodroft) என்பவர் "Is India civilised?", "இந்தியா நாகரீகமடைந்திருக்கிறதா?" என்னும் தலைப்புடன் எழுதியிருக்கும் புஸ்தகத்திலுள்ள சில அருமையான வாக்கியங்களை மொழிபெயர்க்க எமக்கு மிக்க அவாவிருப்பினும் இடமின்மையினாலும் அவகாச மின்மையினாலும் அதைப்பின்போர் சமயத்துக்கு நிறுத்தி வைக்கின்றனம்.

"நம் தற்கால நாகரீகத்தில் எங்கேயாவது நல்லொழுக்கம் கூடாது பொய்சொல்லலாம், திருடலாம், கற்பழிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதா?" இதை எப்படி உண்மை நாகரீகமல்லவென்று சொல்லலாம்?" எனச்சிலா வாதிக்கலாம். இதற்கு இங்கே நாம் ஒரு விடையளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

'தொடுப்பது ருத்ராக்ஷம் இடிப்பது சிவன்கோயில்'
'படிப்பது பாகவதம் எடுப்பது கன்னக்கோல்'
'நடிப்பது சந்யாசம் நாடுவது நாககன்னிகை'

என்ற பழமொழிகளைப்போல நம்முடைய நாகரீகத்தில் நாம் பேசுவதெல்லாம் நல்லொழுக்கம். ஆனால் செய்வதவ்வளவும் அதன் மாறுபாடுகள். இதற்கு அநேக உதாரணங்கள் கூறத்தேவையில்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய செய்கைகளை ஆலோசனைசெய்து பார்ப்பார்களேயானால் இதன் உண்மை நன்கு விளங்கும்.

K. நடேசய்யர், B. A. L. T.,
சித்தூர்.

---

## மானிடப் பிறவியின் அருமையும் பயனும்.

அகண்ட பரிபூரணராயும், சச்சிதானந்த சொரூபராயும், ஆபத்பாந்தவராயும், அனுதிரக்ஷகராயும், ஏகராயுமிருக்கின்ற ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜம் என்னும் நால்வகைத் தோற்றங்களுள் மானிடசரீரமே சிறப்புடைத்து. ஆன்றோரும்,

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றும்
"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்" என்றும்

கூறியவற்றானும் மானிடப் பிறவிதான் மேன்மையுடைத்து என நன்கு விளங்குகிறது.

"அரிதினு மரிதாகிய இவ்வாக்கையைப் பெற்றது அதிக துர்லபம். அதிலும் புருஷனாய்ப் பிறப்பது அதிக அருமை. இவ்வித அருமையான புருஷசன்மத்தை யடைந்தும் நூல்பலகற்றுணர்ந்தும் எவனொருவன் தன்னைக் கரையேற்றிக் கொள்வதற்கேதுவாய புருஷார்த்தங்களைப் பெறுவதற்கு முயலவில்லையோ அவ்வறிவீனன் பைசாச முதலியவைகளினாற் பீடிக்கப்பட்ட ஒருவன் துன்பமடைந்து க்ஷீணதசை யடைவானோ அதைப்போல நாசமடைவான்." என்று விவேக சூடாமணியில் கூறியவாற்றானும்,

"அளவில் யோனி களிற்பிறந்தா மளவில் கரும பலனுகர்ந்தா
மளவில் பேருருற்றிருந்தா மளவி றுன்ப மனுப வித்தா
மளவில் பவநீங்குறுமுயற்சி யாதும் புரிந்தா மலம்பிறந்த
வளவி லளவின் மறைமுடிக்கு மப்பா லானையள விலியை
மேய பரிபூ ரணனாகி விளங்கா நிற்குங் கண்ணுதலை
யாயன் போடு மெவனுணரா னவனே யான்ம துரோகியந்தத்
தீயமடனெப் பாதகந்தான் செய்யமாட்டா னுலகத்தில்
வாய மறையோ தியும்பாசம் பாற்றான் பிரமது ரோகியே."

என சூதசங்கிதை கூறியவாற்றானும், எவனொருவன் தன்னைத்தான் கரையேற்றிக்கொள்ள முயலாமலிருக்கின்றானோ அவன்தான் ஆன்மாவிற்குத் துரோகம் செய்கின்றானென்பது பெறப்படுகின்றது.

மனித சரீரத்தைப் பெற்ற நமக்குப் பகுத்துணர்வு இருக்கிறதே யொழிய ஏனைய் பசு, பட்சி முதலிய அறிவிலிகட்குப் பகுத்துணர்வு இல்லை. இவ்வித உணர்வுடன் கூடிய யாக்கையைப் பெற்ற நாம் கடவுளை யடைய முயலவேண்டும். இதை நோக்கியே ஔவையாரும்,

"உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண்"

என்றலாலும் நம் பிறவிப்பயன் இன்னதென உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது. இப்பிறவிப் பிரயோசனத்தைப் பெருமலிருப்பது வியப்பினும் வியப்பே.

பிறப்பென்னும் பேதமையை நீக்குவதற்கு குருவே ஏற்றவராவர். அவரே திரிமூர்த்திகளுமாவர். அவரே நம் இருமுது குரவருமாவர். அவரைக்காட்டிலும் உயர்ந்தவர் ஒருவருமிலர். அவருக்குத் துரோகம் செய்தல் பிரமத்தைத் துரோகம் செய்தலையொக்கும்.

"அனையகுரு பரனையே தந்தைதா யென்றுள்ளத் தமைக்கவேண்டு
நினைதருமக் குருபூசை யாதிசிவ பூசையாதி யாய்நிலாவும்
புனைதருமக் குருத்துரோகஞ் சிவத்துரோக மெனப்புகல்வார் நல்
வனையறு மெய்ஞ் ஞானகுரு பரனையடைதலின் ஞான மேவலாமே"

என சூதசங்கிதை கூறுகிறது.

குருவினுடைய பார்வை நமக்குப் பட்டமாத்திரத்தில் நம்முற்பவத்திற் தொடர்ந்து வருகின்ற பாவமானது இரவிமுன் இமத்தைப்போல நீங்கும். இதைக்கருதியே ஆன்றோரும்,

"புணர்ந்த பாவமெல்லாம் பரிபூரண
முணர்ந்த ஞானி வழிபட ஓடுமே" என்றருளினர்.

ஆகையினுலே குருவின் மூலமாக நித்திய வஸ்துவாகிய சச்சிதானந்தப் பரம்பொருளும் ஆன்மாவும் அவிநாசப் பொருளென்றும்; நாமரூபங்களாய்த் தோன்றும் ஏனைய வஸ்துக்கள் சுத்தியிற் காணப்படும் ரஜிதமும் கட்டையினிடத்து காணப்படும் கள்வனும்போல மித்தையெனவும் அறியும்படியான நித்யாநித்யவஸ்து விவேகமும்; இகலோக பரலோக விஷய போகங்களெல்லாம் நீரிற் காணப்படும் குமிழியெனவும் இந்திரஜாலமென்றும் மித்தையென்றும் துக்கத்திற்கேதுவென்றும், பிறவிக்குக் காரணமென்றும் கண்டறிந்து அவைகளின்மேல் வெறுப்பு கொள்ளுதலாகிய இகமுத்திரார்த்த பலபோக விராகமும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் என்கிற ஐவகைப்பட்ட மனத்தை தன்னுடைய இச்சா சொருபத்தின் வழியே விடாது, தடுத்தலாகிய சமமும், செவியாதி புறக்காணங்களை சப்தாதி விஷயங்களிற் சுகமடையாவாறு தடுத்தவாகியதமமும், ஸ்திரீ, தனம முதலிய கருமங்கள் துக்கத்திற் கேதுவேயென அவற்றின்கண் பிரவேசியாமல் வெத்தலாகிய விடலும்; காமக்குரோதாதிகளை யடக்குதலும் சுகதுக்காதிகள் நேரிட்டால் அவைகளெல்லாம் ப்ராரப்தவசத்தினுலே வந்தவையென அவற்றைச் சகித்துக்கொண்டு இருத்தலுமாகிய சகித்தலும், நம் சித்தத்தை விஷயங்களிற் சிதருவாறு தடுத்து கற்ற ஞானவிஷயங்களில் மனத்தை ஈசுவரனிடத்திலே எஞ்ஞான்றும் பசுமாத்தாணிபோற் பதியச் செய்தலாகிய சமாதானமும்,

ஆசாரியனிடத்தும் ஆசாரியவார்த்தையினிடத்தும் வேதத்தினிடத்தும் சம்பூர்ண அன்பு வைத்தலாகிய சிரத்தையுமாகிய இச்சமாதிசட்கசம்பத்தியும்; மோட்ச மடையவேண்டுமென்கிற இச்சையாகிய முமூட்சத்துவமுமாகிய ஞான சாதனங்களைப் பெறலாம். இச்சாதனங்கள் கைகூடினாலொழிய ஒருவரும் முக்தி யடையார்கள்.

"சாதன சம்பத்தியாலவ் வீச்சுவரனைத் தெரிந்துணர்வான் முக்தி
யாதரவா னுலகிற் சீவேச ரெப்போது மபேதமுள்ளார்."

(சூதசங்கிதை.)

"கற்றபின் நிற்க அதற்குத்தக" என திருவள்ளுவர் கூறிய பிரகாரம் சாதனங்களை யெல்லாம் கசடறக்கற்று அவைகளை சிரவண, மனன, நிதித்யாசனத்தின் மூலமாய்ப் பயின்று, "எவனொருவன் யான் எனதென்னும் அகங்கார மமகாரங்களற்றவனாயும். சமபுத்தி யுடையவனாயும் சர்வ ஜீவஜந்துக்களிடத்திலும் த்வேஷமின்றி அன்புடனும் பொறையே பூஷணமாய் பூண்டவனாயு மிருக்கிறானோ அவனே எனக்குப் பிரியமுடையவன்" என பகவத்கீதையில் கூறிய வண்ணம் அகங்கார மமகாரங்களை விடவேண்டும். ஆகையால்,

"யானென தென்னுஞ் செறுக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்" என நாயனார் கூறிய பிரகாரம் அகங்காரமமகாரங்களை விட்டு,

"தன்னை யறிவதே அறிவாம் அஃதன்றிப்
பின்னை யறிவது பேயறிவாமே"

என ஆன்றோர் கூறியபடி தன்னுடைய யதார்த்தவடிவை அபரோக்ஷமாயறிந்து சர்வ துக்க நிவிருத்தி பரமானந்தப் பிராப்தியே சொரூபமாயிருக்கின்ற மோக்ஷமடைய முயலவோமாக. கடவுள் நமக்கு அருள் புரிவாராக. உலகம் பிழை பொறுக்க.

பூ. ஜானகிராமன்,
ஓர் தமிழன்பன், இராணிப்பேட்டை.

இவ்வியாசத்தையும் பின்னுள்ள 'செல்வம்' என்னும் வியாசத்தையும் சில மாதங்களுக்கு முன் எழுதியனுப்பியவரும், இப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமாந் பூ. ஸ்ரீநிவாசலு நாயுடு அவர்களின் தமயனார் குமாருமாகிய சுமார் 19 வயதுள்ள இம்மாணவர் 18—8—25-ல் இவ்வுலக வாழ்க்கையை நீத்துப் பரலோக வாழ்வை யெய்தினர். தம் ஏகபுத்திரனையிழந்து மனங்கலங்கும் பெற்றோர்க்கு ஆண்டவன் மனோசாந்தியை யளிக்குமாறு பிரார்த்திப்போமாக. (ப. ர்.)

# வேதாந்த சாஸ்திர விசார சங்கிரக வினாவிடை.
## (இராம கிருஷ்ண சம்பாஷணை).

(191-வது பக்கத் தொடர்ச்சி).

சாக்கிராவஸ்தையிற் றோற்றும் ஆகாயம் சொப்பனாவஸ்தையிலும், சொப்பனாவஸ்தையிற் றோற்றும் ஆகாயம் சாக்கிராவஸ்தையிலும் தோற்றாமையின், அவையிரண்டும் கண்டப்பொருளேயாம். கிரியை யுடையது கண்டப்பொருளாமென்பது நியமமாகலின், தோன்றுதலும் மறைதலுமாகிய ஆகாயத்தைக் கிரியை யில்லாததெனக் கூறுவது ஒருவற்றானும் பொருந்துவதன்றாம். சுருதி ஆகாயத்திற்கு உற்பத்தியும் நாசமுங் கூறுதலும் இங்குக் கவனித்தல் வேண்டும்.

ஆகாயம் எத்தன்மையதென்பதை நுணுகியாராயாதவர்க்கு அது கிரியையற்றதுபோலத் தோன்றுவதன்றி, நுணுகி யாராய்வார்க்குக் கிரியை யற்றதாகத் தோன்றுவதில்லையாம். சுருதி பஞ்சீகாணம் கூறுமிடத்தும் பரமேசுவரனால் முன்னர் ஆகாயம் இரண்டுபாகமாகப் பிரிக்கப்பட்டது; பின்னர் அவற்றுள் ஒருபாகம் நான்காகப் பிரிக்கப்பட்டது என்று கூறுவதை இராமா! நீ நன்கு கவனித்துணர்தல்வேண்டும்; அங்ஙனமுணர்வாயாயின் ஆகாயம் கிரியை யுடையதா மென்பது உனக்கு ஆசங்கையில்லாது விளங்குவதாம்.

காலம் என்பது ஆகாயம்போல, ஒரு பொருளன்றாம். வியவகாரதசையில் பொருள்களின் பண்பு பற்றியும் தொழில்பற்றியும் இறப்பு நிகழ்வு எதிர்வு எனக்கற்பிக்கப் படுவதேயாம். அது பொருள்களின் பண்பையும் தொழிலையும் விட்டுத் தனித்தொரு பொருளாகவில்லையாமாகலின், அதனைப் பொருளாகக் கூறுவது பொருந்துவதன்றாம். ஒரு பொருளின் முன்னிலைமையை யிறந்தகாலமென்றும், பின்னிலைமையை யெதிர்காலமென்றும், இவ்விரண்டிற்கும் மத்தியமான நிலைமையை நிகழ்காலமென்றும வியவகாரதசையில் கற்பிக்கப்படுதல், சூரியன் உதயமாகுஞ் சமயத்தை அஸ்தமிக்கும் சமயத்தைக்கருதி இறந்தகாலமென்றும், அஸ்தமிக்கும் சமயத்தை உதயமாகுஞ் சமயத்தைக் குறித்து எதிர்காலமென்றும், இவ்விரண்டிற்கும் மத்தியமான உச்சியில் வருஞ்சமயத்தை ஷெ இரண்டையும் குறித்து நிகழ்காலமென்றும் கூறுவதனால் விளங்குவதாமன்றோ?

இதனால் காலமென்பது வியவகார தசையிலேயே தனக்கெனப் பொருளில்லாததா மென்பது பெறப்படுவதாம்; படவே, தனக்கெனப் பொருளொன்றில்லாத காலத்தை அது கிரியை யுடையதாயிருக்கின்றது. அல்லது கிரியை யில்லாததா யிருக்கின்றதென்னும் வாதம் பயனற்ற வாதமாய் முடியுமெனக்க.

திக்கும் வியவகார நிமித்தம் பொருள்களின் இருப்பைநோக்கி வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு எனக் கற்பிக்கப்பட்டதேயாம்; ஆகவே அதுவும் வியவகார தசையிலேயே தனக்கெனப் பொருளில்லாததாம். இவ்வாறுள்ள திக்கை ஆசிரியை யுடையதா யிருக்கின்றது; அல்லது கிரியை யில்லாததா யிருக்கின்றதென்னும் வாதமும் பயனற்றவாதமா மென்க.

வியவகார காலத்திலேயே தனக்கெனப் பொருளில்லாதுள்ள காலமும் திக்கும் கிரியை யில்லாதனவா யிருக்கின்றன என்பது ஆமையின் மயிர் அறுபதடி நீளமா யிருக்கின்றது; குதிரைக் கொம்பு கூரா யிருக்கின்றது என்று கூறுதல்போல்வதாம்.

இதுகாறும் கூறியவற்றால் மாயையும் ஆகாயமும் கிரியையுடையனவாம்; அதனால் அநித்தியப் பொருளாம்; காலமும் திக்கும் வியவகார தசையிலேயே சொன்மாத்திரமாக விருப்பனவா மென்பது பெறப்படுமா றுணர்க. (தொடரும்.)

(இலக்கண இலக்கிய வேதாந்த தர்க்க போதகாசிரியர்)

கோ.வடிவேல் செட்டியார்,

சென்னை.

## செல்வம்.

செல்வம் என்னுஞ்சொல் அம்விகுதிபெற்றதொழிற் பெயராகும். இவ்விகுதியானது தன்மைப் பன்மை எதிர்காலவினை முற்றாகலின் இச் செல்வமானது ஒருவரிடமும் நிலைத்திராது. ஆகையினாலே இச்செல் வத்தின் தன்மை இப்பெற்றித்தென தெள்ளிதின் விளங்குகிறது. இது ஒருவரிடமும் நிலைத்திராது.

உலகத்தில் செல்வமே சிறப்புடையது. ஏனெனின் தருமமார்க் கத்தைக் கடைப் பிடித்தொழுகுவதற்கும், இதன் வாயிலாக என்றைக்கு மழியா இன்பப்பேற்றை யெய்துவதற்கும், இன்றி யமையாக் காரணமா யுள்ளது இப்பொருளே யாகும்.

"நற்பொரு ளறத்தை யின்ப நலத்தை ஞானத்தை மிக்க
பற்பல ருறவைப்பொல்லாப் பகைதவிர்த்திடுந் திறத்தைச்
பொற்பெரும் புகழை யென்றுந்துகளிலாப் பெருமை தன்னைப்
பொற் புறுங்கதியை வாய்ந்த பொருளலாற் பெறுவதின்றே."

(இ—ள்) நல்ல உடைமைகளையும், தருமத்தையும், இன்பத்தையும், சௌந் தர்யத்தையும், அறிவையும், முன்னே கண்டறியாதவர்களையும் நட்பாகும் படிச் செய்வதும், விரோதத்தை நீக்குவதும் வலிவைத் தரக்கூடியதும், கீர்த்தியைத் தரக்கூடியதும், நற்பதவியை ஈயவல்லதுமாகிய இச்செல் வத்தைத் தவிர உலகத்தில் வேறொன்றுமில்லாகும்.

ஆகையினுலே இப்பெருஞ் சிறப்பு வாய்ந்த இச்செல்வமானது ஒருவனிடத்திலில்லையாயின் அவன் நடைப்பிணத்திற் கொப்பாவான். அவன் யாதாமொரு கருமஞ் செய்வதற்கும் சக்தி யற்றவனுயும், ஊக்க மற்றவனுயும், பயித்தியக்காரனுயும், துக்கமே தன்னுருவாயும், கீர்த்தி யற்றவனுயும் காணப்படுவன். ஆன்றோரும்,

பொருளிலார்க் கின்பம் இல்லை
புண்ணியம் இல்லை என்றும்
மருவுறு கீர்த்தி யில்லை
மாந்தருட் பெருமை யில்லை
கருதிய கருமம் இல்லை
கதிபெறு வழியும் இல்லை
பெருநிலத் திடை நடக்கும்
பிணமெனப் படுவ ரன்றே'' என்றருளினர்.

அன்றியும் ஒருவனிடத்து இச்செல்வமானது இல்லாவிட்டால் அவனை ஒருவரும் ஒருபொருளா யுன்னர்கள்.

"செல்வர் வாய்ச்—சொற்சொல்லும்
புல்லீரப்போழ்தி னுழவேபோன் மீதாடிச்
செல்லாவாநல் கூர்ந்தார் சொல்."

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்'' என்பதற்கிணங்க இல்லாதவன் தன் புத்திரராலும், தன்னுடைய மனைவியாலும், தன்னுடைய உற்ருர் மற்ருேராலும் விரும்பப்பட மாட்டான் அன்றியும், தன்னை ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்து பெற்றும், தன்னை அன்போடு சீராட்டியும், பாராட்டியு மீன்றதாயே நம்மிடத்தில் பணமில்லாவிட்டால் விரும்பாளென்ருல் அதன் பெருமை என்னென்றுரைப்பது. பட்டினத்தடிகளும்,

தாயும்பகை, கொண்ட பெண்டிர் பெரும்பகை, தன்னுடை
சேயும்பகை, யுறவோரும்பகை, யிச்சகமும்பகை,
ஆயும்பொழுதிலருஞ் செல்வ நீங்கி லித்தரு.........................
....................................என்றருளினர்.

ஒருவனிடத்து செல்வமானது வந்துற்றகாலத்து நீர் நிரம்பப்பெற்ற தடாகத்தை நாடிவரும் கொக்கு முதலிய பக்ஷிகள் போன்றும், வெல்லப் பானையைச் சுற்றிலும் மொய்க்கும் ஈ, எறும்புகளைப்போன்றும், நமது உற்ருருறவினர்க ளல்லாதவர்களெல்லாம் உறவை மேற்கொண்டொழுகி வந்தடைவார்கள். அஃதற்ற காலத்து நீர்வற்றின தடாகத்தில் கொக்கு முதலானவைகளும், வெல்லமில்லாதபானையை ஈ, எறும்புகளும் எவ்வாறு அணுகாவோ அதைப்போலற்றுவிடுவார்கள். நெருங்கிய உறவினரையும்

தன்னுறவினரல்ல ரென்பார்கள். "கையிலுண்டானால் காத்திருப்பார் ஆயிரம்பேர்" என்றபடி நம்மிடத்தில் கொஞ்சம் பணமிருந்தால் நம்மை எல்லோரும் வந்தடைவார்கள். பணமில்லாதவர்க்கு இவ்வுலகமே இல்லை. பொருளில்லாவிட்டால் இவ்வுலகத்தில் யாதொரு பிரயோஜனமு மின்றாகும்.

நாம் ஒவ்வொருவம் நம்மாலியன்றவரையிலும் இடையரு முயற்சி செய்து பொருளை அடைய முயலவேண்டும். தன்னுடைய முற்பவத்தில் செய்த வினையளவாக வந்தெய்துமே யொழிய முயற்சியினால் வரக்கூடிய தல்லவாயினும் நாமும் நம்மாலியன்றவளவில் அடைய முயலவேண்டும். ஆன்றோரும்,

"ஈட்டும் பொருண் முயற்சி எண்ணிறந்த வாயினும் ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்" என்றனர்.

இச்செல்வமானது முன் சன்மத்தில் எவரொருவர் தருமத்தை நன்கியற்றினார்களோ அவர்கள் இச்சன்மத்தில் அளவிலாச் செல்வமடையப் பெற்று ஆனந்தமடைவார்கள். அப்படிக்கின்றி முன்சன்மத்திற் றருமங்களைச் செய்யாதவர்கள் துக்கமே தலைகொண்டு தாம்வறுமையால் பூடிக்கப்பெற்று வீடுகடோறுஞ் சென்றிரந்தாலும் உணவு கிடைக்காமல் வருந்துவார்கள். ஆன்றோரும்,

"தக்கமுற்பவத்திலான்ற தரும நன்கியற்றினோர்கள்
ஒக்கவிப் பவத்திலின்ப மொருங்கனு பவிப்பர் இன்றேல்
மிக்கவெந் துயரத்தாழ்வார்" என்றனர்.

இத்தகைய செல்வமானது ஒருவனை வந்தடையுமேயாகில் முன்பு அவனுக்கிருந்த இயற்கைக்குணமற்று அதற்குப் பதிலாக பொறாமை, உலோபத்தன்மை முதலிய தீக்குணம் மேலிட்டு நிற்கும். கீழ்மக்களுக்கு இச்செல்வம் வந்தெய்துமேயாகில் அவர்களுக்குச் செருக்குவந்தடையும். அவர்களெதிரில் எவர்களேனும் பேசுவார்களானால் அவர்கள் தம்மிடத்தில் இன்னவிஷயம் பேசுகிறார்களென்றும், அவர்களின் செவிகளிலேற மாட்டா. பிறருடன் பேசுவதற்கும் நாவெழாமல் ஊமைகளைப்போல மௌனமுற்றிருப்பர். தமது உற்றாரென்றும், சினேகிதரென்றும் சற்றேனும் பாராமல் குருடரைப்போலிருப்பார்கள். அன்றியும் கடவுளைச் சற்றேனுஞ் சிந்தியார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் செல்வமே யாகும். ஆன்றோரும்,

"சிறியரே மதிக்கு மிந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்குமூடி வாயுள்ளோர்மூக ராவர்
பறியணி செவியு ளாரும் பயிறரு செவிடராவர்
குறிபெருங் கண்ணுளாருங் குருடாய் முடிவரன்றே"

"எற்பெறு மிருநிதிச் செருக்க தெய்திடில்
தேர்செவி யுடையவர் செவிட ராகுவர்
ஓர்தரு முரைவலா ரூமை யாகுவர்
கூர்விழி யுடையவர் குருடரா வரே."

"பொருவரு பந்தமெல்லாம் புணர்த்திடும் தெய்வசிந்தை
ஒருவமே விட்டுநிற்கும் உறக்கமும் இறக்கச்செய்யும்
கருவினுட் புகுத்தும் இன்ன கரிசுகண் டதனு லன்றோ
இருநிலத் திடைவெ றுக்கை என்மனுர் புலமை சான்றோர்."

என்றவாறு இப்பொருளானது தீச்செயல்களைப் பயக்குவதினுலிதற்கு ஆன்றோர்கள் வெறுக்கை எனப்பெயர் புனைந்திருக்கிறார்கள்.

இத்துர்க்குணத்தைப் பயக்கும்படியான இச்செல்வத்தை யடைந்த நாம் அதை மூன்று பாகங்களாகப் பங்கிட்டு நம் ஜீவனத்திற் கொருபாகமும், மற்றொருபாகத்தை நம் முதுமைப் பருவத்திற்காகவும், எஞ்சிநின்ற மற்றொருபாகத்தைத் தரும கைங்கரியங்களுக்கென்றும் எடுத்துவைத்து கிரமந்தவறாமல் செய்து வரவேண்டும். இப்படிக்கின்றி தம் வருமானத்திற் கேற்றபடி செலவழியாமல் பார்ப்பவர்களுக்குக் கௌரவமாக இருக்கும்படிக்கு வீண் ஆடம்பரங்கள் செய்து ஊரெல்லாம் கடன் வாங்கிப் பிறகு கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள் சிலர்.

ஆன முதலில் அதிகஞ் செலவானல்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனய் எழ்பிறப்பும் தீயனய்
நல்லார்க்கும் பொல்லனு நாடு."

என்ற வெண்பாவிற் கிலக்காகி கடன் கொடுத்தவர்களைக் கண்டால் பூனையைக்கண்ட எலியைப்போலிராமல் தாம் பெற்ற செல்வத்தைக் கோவில்களுக்களித்தல் முதலிய நற்காரியங்களிலே செலவிடவேண்டும்.

"கைப்பொருள் பெற்றஞான்றே கடவுளாலயத்திற் கீந்தும்
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டுவந்து
வைப்பென விரப்போர்க்கீந்து வருபவருளரோற் கூற்ற
மொய்ப் புயத்தண்டந்தப்பி மூன்னவ னின்பத்தாழ்வார்."

என ஆன்றோர் கூறிய வண்ணஞ் செலவிடுவார்களானல் அவர்கள் எமவாதனையினின்று நீங்கி பேரின்பப் பேற்றை யடைவார்கள். செல்வத்தைத்தானு மனுபவியர்மலும், வறியோர்க்கில்லையென்றும், இரப்போர்க்குக்கொடாமலு மிருப்பவனிடத்தில், தேய்பிறைச் சந்திரனைப்போல தேய்ந்து பயனற்றுவிடும். பொருளைப்பெற்று அதனுலாகும் நற்சுகங்களைத் துவ்வாமலும், பிறரை யனுபவிக்காமலு மிருக்கும்படியான

உலோபியரிடத்தில்சேர்ந்த செல்வமானது பேடியின் கையிலுள்ளவாளும் அலியை யடைந்த அரம்பையுமாகும். ஆன்றோரும்,

"பொலிவளர் தங்கிய புவியிற்றானுண்டும்
பலிபிறாக் கிட்டுமே பயன்றுவ் வான்பொருள்
வலியிலாப் பேடிகை வாள்கொ லாணென
அலியினை மேவிய வரம்பை யேகொலோ." என்றனர்.

பொருளைப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் அதன் பிரயோஜன மின்ன தென்பதை யுணர்ந்து அதனைச் சன்மார்க்கத்திற் செலவிட வேண்டும். இதுவே நாம் செல்வத்தை யடைந்த பயன். ஏரியில் நீர் பெருகுங்காலத்து ஒரு கலிங்கினைத் திறந்துவிட்டால் குளக்கரைக்கு எவ்வித விடையூறுமின்றி நீர்ப் பெருக்குண்டாகும். அந்நீரைக் கலிங்கின்வழியே விடாதொழியின் வெள்ளம் பெருகி ஏரிக்கரையுடைந்து அனேக இடையூறுகளுண்டாகும். அதைப்போல செல்வத்தைப் பெற்ற நாம் சிறிதுபாகத்தை நல்வழியில் செலவிட்டு வந்தோமேயாகில் ஊற்று நீரைப்போலப் பெருகும். இல்லாவிடில் விருத்தியாகாமல் க்ஷீணமடையும்.

"துகடீர் பெருஞ்செல் வந்தோன்றியக்காற் றொட்டுப்
பகடுநடந்த கூழ்பல்லாரோ—டுண்க
வகடுறயார் மாட்டுநில்லாது செல்வஞ்
சகடக்கால் போலவரும்." (நாலடியார்.)

"ஆறிடும் மேடும் மடுவும் போலாஞ் செல்வம் மாறிடு ஏறிடும் மானிலத்தீர்" என்றபடி செல்வமானது ஒருவரிடத்தும் நிலைத்திருப்பதருமை. ஆகையினாலே அதனைப்பெற்றோர் அதன்மேலேயே கண்ணுங் கருத்துஞ் செலுத்திப் பணப்பேய்களாகாமல் தாமரை யிலைத்தண்ணீரைப் போன்று அதனிடத்துப் பற்றின்றி நிஷ்காமத்தன்மையராகி அறஞ்செய்து பேரின்பப்பேற்றை அடைவோமாக.

"என்பொருளென் பொருளென்று சீவன்வீடு
மனமேயொன் றியம்பக் கேளாய்
உன்பொருளா னலதன்மே லுன்னுமம்
வரைந்துளதோ உன்ற னேடும்
முன்பிறந்து வளர்ந்ததுகொ லினையுனைவிட்
டகலாதோ முதிர்ந்து நீதான்
முன்பிறக்கும் போததுவுங் கூடவிறக்
திடுங்கொல்லோ பேசு வாயே."

பூ. ஜானகிராமன்,
ஓர் தமிழன்பன், இராணிப்பேட்டை.

**தேவை** **தேவை**

நமது 'சன்மார்க்க பானு' விற்கு சந்தாதார்களைச் சேர்க்க தமிழ் நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் தரப்படும். முயற்சியுடையவர்கள் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்குமேல் சம்பாதிக்கலாம். விசேஷத்திற்கு உடனே எழுதுங்கள்.

பத்திராதிபர்,

**"சன்மார்க்கபானு,"**

ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

## புத்தக விளம்பரம்.

திருக்குறள்-பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, இங்கிலீஷ் உரையுடன்,

| | |
|---|---|
| (சென்னை, வேதாந்த தர்க்க போதகாசிரியர் ஸ்ரீமான் கோ. வடிவேல் செட்டியார் இயற்றியது) 2-வால்யூம் ... | ரூ. 8—0—0 |
| ௸ மணக்குடவர் உரை ... | ரூ. 3—0—0 |
| கைவல்ய நவநீத வினாவிடை (௸யார் இயற்றியது) ... ... | ரூ. 2—8—0 |
| பகவத்கீதை வசன வினாவிடை௸ ௸ | ரூ. 1-12—0 |
| மெய்ஞ்ஞானபோதம் ௸யார் லோகோபகாரியில் எழுதியது ... ... ... ... ... | ரூ. 0-12—0 |
| விவேகாநந்தர் உபந்யாச ஞானத்திரட்டு | ரூ. 1—0—0 |
| வியாச தாத்பர்ய நிர்ணயம் ... ... | ரூ. 0-12—0 |
| சசிவர்ணபோதம் ஆசிரியர் கோ. வடிவேல் செட்டியார் எழுதியபதவுரை, பொழிப்புரை, விசேடவுரையுடன்கூடியது | 0-12—0 |
| விவேக சூடாமணி ... ... ... | ரூ. 0-12—0 |
| மநீஷாபஞ்சகம் ... ... ... | ரூ. 0—5—0 |
| மகாராஜா துறவு-வசனம் ... ... | ரூ. 0—3—0 |
| தேசிங்குராஜன் ... ... ... | ரூ. 0—6—0 |
| நாகாஜீவ வாதங்கட்டளை (தமிழ்) ... | ரூ. 0—4—0 |
| ௸ (தெலுங்கு) படத்துடன் கூடியது .. | ரூ. 0—3—0 |
| காரியசித்தியின் இரகசியம் ... ... | ரூ. 0—3—0 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,
ராணிப்பேட்டை (வ. ஆ.).